Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சிறியதோ,பெரியதோ, எந்த அளவுக்கிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

FedEx Express

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி - 30 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற.அவ்வல்02 (12.04.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:195

### ஈ.பி.டி.பியின் திருகோணமலை மாவட்ட

## பிரதி அமைப்பாளர் குஞ்சன் வீதியில் சுட்டுக் கொலை!

(திருகோணமலை)

ஈ.பி.டி.பியின் திருகோணமலை மாவட்ட பிரதி அமைப்பாளரும், அந்த அமைப்பின் நீண்ட கால உறுப்பினருமான குஞ்சன் - நேற்று திருகோணமலை நகரில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 10.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

கோணஸ்வரர் ஆலயத்துக்கு தனது இரண்டு நண்பர்களுடன் சென்றுவிட்டு, சைக்கிளில் வீட்டுக் திரும்பிக்கொண்டிருந்தபோதே - ஹஸ்கிசன் வீதியில் வைத்து இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து 250 மீற்றர் தொலைவில் - மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மிக நெருக்கமாக நின்று இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றனர்.

குஞ்சன் எனப்படும் 33 வயதான விஜயதாசன் விஜயேந்திரனின் உடலை குண்டுகள் பாய்ந்து படுகாயமுற்ற நிலையில் உடனடியாக திருகோணமலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் - அங்கு அவர் உயிரிழந்தார்.

இவர் ஈ.பி.டி.பியின் திருகோணமலை மாவட்ட பிரதி அமைப்பாளர் என்றும் மூதூர் - கிளிவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எனவும் தெரியவருகிறது.

### யாழ்ப்பாணம் வந்துவிட்டு வீடு திரும்பிய

## சமுர்த்தித் திட்ட உத்தியோகத்தர் கல்முனையில் சுட்டுக் கொலை!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் - கல்முனையில் சமுர்த்தித் திட்ட உத்தியோகத்தரான சீவரத்தினம் அருளம்பலம் என்பவர் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

பொலிஸ் உபசேவையில் முன்னர் பணியாற்றிவிட்டு, தற்போது சமுர்த்தி உத்தியோகத்தராகப் பணியாற்றும் மேற்படி குடும்பஸ்தர் - யாழ்ப்பாணத்திலிருந்து தனது வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோதே சுடப்பட்டார்.

கல்முனை - மணல்சேனை விபுலானந்த வீதியால் வீட்டுக்கு நடந்துசென்றுகொண்டிருந்தபோதே - இவர் மீது 9 மி.மீ. கைத்துப்பாக்கியால் சுடப்பட்டதாகத் தெரியவருகிறது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் தனது 11 வயது மகனை விடுமுறைக்காக வீட்டுக்குக் கூட்டிச் சென்று கொண்டிருந்தபோதே - அடையாளம் தெரியாத இருவர் இவர் மீது துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர்.

மூன்று ரவைகள் இவரது உடலில் பாய்ந்த நிலையில் அந்த இடத்திலேயே இவர் உயிரிழந்தார். இவரது மகன் எவ்வித காயங்களுமின்றித் தப்பித்துக்கொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரதி அமைச்சர்கள் மீது அநுரா பாய்ச்சல்: அரசாங்கத்தை குழப்புவதாக குற்றச்சாட்டு!

### ஆளும் கூட்டணிக்குள் நெருக்கடி அதிகரிப்பு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியின் நடவடிக்கைகள் குறித்து, பிரதியமைச்சர்கள் கூட்டமைப்பு கடுமையாகச் சாடி வருவதால் - அரசாங்கத்துக்குள் குழப்பமான நிலை தோன்றிவருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து அண்மைக்காலமாக ஜே.வி.பியினர் நேரடியாகவே விமர்சனங்களைச் செய்து பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பதிலுக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவுப் பலத்துடன் உள்ள பிரதியமைச்சர்கள் தலைமைதாங்கும் பிரதியமைச்சர்கள் கூட்டமைப்பும் ஜே.வி.பிக்கு எதிரான பிரசாரங்களை தீவிரப்படுத்த ஆரம்பித்துள்ளது.

ஜே.வி.பியினர் மீது பிரதியமைச்சர்கள் கூட்டமைப்பு தீவிரமான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதால் - அநுரா பண்டாரநாயக்க போன்ற ஜே.வி.பி சார்புடைய அமைச்சர்களை பெரிதும் கடுப்பேற்றியிருப்பதாகவும் தெரியவருகிறது.

பிரதியமைச்சர்கள் கூட்டமைப்பு - அரசாங்கத்தைக் குழப்பும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும், இந்த அரசாங்கத்தில் தாம் அமைச்சர் பதவி வகிக்கிறார்கள் என்பதை அவர்கள் உணர வேண்டும் என்றும் அநுரா பண்டாரநாயக்க - பிரதி அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

ஏற்கனவே ஜே.வி.பியினருக்கும், ஜனாதிபதி சார்புடையவர்களுக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை சிப்பாயின் சடலம் கண்டுபிடிப்பு!

(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்டத்தில் வாகொல்லாகட - கிம்புலாபிட்டியாவ என்னுமிடத்தில் உருக்குலைந்த நிலையில் கடற்படைச் சிப்பாய் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

திருகோணமலை கடற்படை முகாமைச் சேர்ந்த சோமபாலகே சமன்குமார (வயது 20) என்ற கடற்படைச் சிப்பாயின் சடலமே இதுவென அவரின் உறவினர்கள் நேற்றுமுன்தினம் அடை யாளம் காட்டினர்.

இவர் கடந்த 29 ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளதாக திருகோணமலை கடற்படை (12 ஆம் பக்கம் பார்க்க)

## சாள்ஸ் அன்ரனி படையணியின் 14 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு!

(கிளிநொச்சி)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் 14 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வின் ஆரம்பத்தில் - பொதுச் சுடரை தளபதிகளில் ஒருவரான ஜெரி ஏற்றிவைக்க, வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் கொடியை படையணியின் சிறப்புத் தளபதி நகுலன் ஏற்றினார்.

தொடர்ந்து மாவீரர்களின் பொதுப்படத்திற்கான சுடரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தாக்குதல் தளபதிகளான பிரதாபன், வசந்தன், கோபித் ஆகியோர் ஏற்றிவைக்க, இதற்கான மலர்மாலையை படையணியின் தளபதிகளான லோரன்ஸ், வீரப்பன் ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து அன்னை பூபதியின் படத்திற்கு மாலதி படையணியின் தாக்குதல் தளபதிகளில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவினர் தீவுச்சேனைக்கு விஜயம்!

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டம் வெலிக்கந்த - தீவுச்சேனையில் கருணா குழுவின் முகாம் இருப்பதான தகவல் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அப்பகுதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் சென்று பார்வையிட்டனர்.

இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவருடன் கண்காணிப்புக் குழவினர் அங்கு சென்றதாகத் தெரியவருகிறது. இவர்கள் அங்கு சென்றபோது கருணா குழுவின் முகாம் தீவுச்சேனையில் இல்லாதது போன்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

## இடைநிறுத்தப்பட்ட அதிபர்களிடம் இருந்து பெருமளவான சொத்துக்கள் கண்டுபிடிப்பு!

(கொழும்பு)

பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் முறைகேடுகளை மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, இடைநிறுத்தப்பட்டுள்ள இரு அதிபர்களும் சட்டவிரோதமான முறையில் சொத்துக்களைச் சேர்த்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முன்னணிப் பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படும் முறைகேடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஜனாதிபதி விசாரணைப் பிரிவினர், இந்த இரு அதிபர்களும் ஆடம்பர வீடுகள், சொத்துக்கள், வாகனங்கள் போன்றவற்றை முறையற்ற விதத்தில் பெற்றுக் கொண்டுள்ளமையைக் கண்டுபிடித்துள்ளனர்.

கொழும்பு - ஆனந்தா கல்லூரி அதிபர் பீ.ஏ. அபேரத்ன மற்றும் குருநாகல் மலியதேவா மகளிர் கல்லூரி அதிபர் கே.ஏ.வஜிரகுமாரிஹாமி ஆகியோரே இவ்வாறு சொத்துக்களைச் சேர்த்துள்ளனர்.

இவர்களின் சொத்துக்களின் பெறுமதியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பாடசாலை அதிபர்களான இவர்களுக்கு இந்தச் சொத்துக்களைப் பெற்றிருக்க முடியாதெனவும் இவற்றை சட்டவிரோதமான முறையிலேயே பெற்றிருக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இடைநிறுத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் கூட்டத்துக்கு அருகே துப்பாக்கியுடன் இளைஞர் கைது!

(கொழும்பு)

மகியங்கனையில் நேற்றுமுன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட கூட்டம் நடை பெற்ற இடத்திற்கருகே வாகனம் ஒன்றில் துப்பாக்கி ஒன்றும் சில தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது -

மகியங்கனை தேசிய பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

பிரதமர் மேடையில் உரையாற்றிக் கொண்டிருக்கையில் - அவ்விடத்திற்கு சமீபமாக சந்தேகத்திற்கிடமாக நிறுத்தப்பட்டிருந்த வாகனம் குறித்து சந்தேகித்த பொலிஸார், வாகனத்தைச் சோதனையிட முயன்றபோதும் - வாகனத்திலிருந்தவர் அதற்கு அனுமதிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

எனினும், பின்னர் பிரதமரின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும் இணைந்து மேற்கொண்ட சோதனையில் வாகனத்துக்குள் (12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR Your friend in the skies...

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால்
யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்

**சிவப்பு நாட்டரிசி**

வழங்கலுக்கான கேள்வி கோரல்

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2005 ஏப்ரல், மே, யூன் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2005 ஏப்ரல் (MT) | 2005 மே (MT) | 2005 யூன் (MT) |
| 1 | சாவகச்சேரி | 90 | 90 | 90 |
| 2 | கைதடி | 30 | 30 | 30 |
| 3 | கொடிகாமம் | 135 | 135 | 135 |
| 4 | உடுப்பிட்டி | 10 | 10 | 10 |
| 5 | கட்டைவேலி - நெல்லியடி | 10 | 10 | 10 |
| 6 | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 7 | புலோலி | 10 | 10 | 10 |
| 8 | மருதங்கேணி | 10 | 10 | 10 |
| 9 | யாழ்ப்பாணம் | 85 | 85 | 85 |
| 10 | நல்லூர் | 25 | 25 | 25 |
| 11 | அச்சுவேலி | 30 | 30 | 30 |
| 12 | நீர்வேலி | 30 | 30 | 30 |
| 13 | மானிப்பாய் | 20 | 20 | 20 |
| 14 | பண்டத்தரிப்பு | 20 | 20 | 20 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 10 | 10 | 10 |
| 16 | தெல்லிப்பளை | 75 | 75 | 75 |
| 17 | சங்கானை | 40 | 40 | 40 |
| 18 | சுன்னாகம் | 30 | 30 | 30 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 20 | 20 | 20 |
| 20 | வேலணை | 20 | 20 | 20 |
| 21 | ஊர்காவற்றுறை | 30 | 30 | 30 |
| 22 | காரைநகர் | 20 | 20 | 20 |
| 23 | தீவகம் | 5 | 5 | 5 |
| 24 | நெடுந்தீவு | 5 | 5 | 5 |
| | மொத்தம் | 800 | 800 | 800 |

02. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்து பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

03. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500 ஐ யாழ் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்வி படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.04.11 ஆம் திகதி தொடக்கம் 2005.04.26 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களை பெறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

04. மீளளிக்க முடியாத கேள்விவைப்புகளாக ரூபா 500 ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்வி படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி கோரப்படவுள்ள அரிசி புழுங்கல் அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

06. பூரணப்படுத்திய இரு கேள்வி படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். ( அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 27.04.2005 பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்கமுடியும்.

07. கேள்வி பத்திரத்தின் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் *சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி* என எழுதப்படல் வேண்டும்.

08. கேள்வி காரர்கள் (**Bidders**) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10 வீதம் மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக ( Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

*க.கணேஷ்,*
*தலைவர் / அரச அதிபர்,*
*மாவட்ட கேள்விச் சபை / மாவட்ட*
*செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*11.04.2005*

(C/4043)

# வேலைக்கு சென்றவர் வீடு திரும்பவில்லை!

வேலைக்குச்சென்றதாகக் கூறிச் சென்றவர் ஏழுநாட்களாகியும் வீடு திரும்பவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றைய தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாவடி வடக்கு கொக்குவிலில் வசிக்கும் இ.ராசதுரை சிவதாசன் (வயது-31) என்பவரையே காணவில்லையென இவரது சகோதரரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

இவர் கடந்த 4.4.2005 அன்று வேலைக்கு செல்வதாக கூறிச் சென்றவர் இன்னமும் வீடு திரும்பவில்லை என முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மனிதஉரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரிகள் மேற்கொள்ளவுள்ளனர்.

# விவாதப் போட்டி

யாழ். மாவட்ட மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் அன்னை பூபதி வெற்றிக் கிண்ணத்திற்காக அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட மாபெரும் விவாதச் சுற்றுப்போட்டி கடந்த வெள்ளிக் கிழமை யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.

இந்தப் போட்டியில் பிரபல பாடசாலைகளான யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, மத்தியகல்லூரி, பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி ஆகியன பங்குபற்றின.

இதில் மூன்றாம் இடத்தை வேம்படி மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது. இறுதிப்போட்டிக்கு யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் போட்டிக்கான ஆதரவினை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொங்கல் விழா

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் இன்று காலை 6 மணிக்கு அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும்.

# வருடப்பிறப்பு பூசைகள்

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் வருடப்பிறப்பு தின பூசை வியாழன் காலை 9 மணிக்கு அபிஷேக உற்சவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசைகள் நடைபெறும்.

அன்றைய தினம் பக்தர்கள் காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை சொந்த வாகனங்களில் சென்று வருவதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளதாக ஆலயத்தின் நிர்வாக தலைவர் பிரம்மஸ்ரீ சு.துரைச்சாமி ஐயர் தெரிவித்தார்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • •

தெல்லிப்பளை துர்க்கைஅம்மன் ஆலயத்தின் வருடாந்த வருடப்பிறப்பு பூசை வியாழக்கிழமை காலை 6 மணிக்கு அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசைகள் இடம்பெறும்.

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது


குளிரூட்டப்பட்டது
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
கா.நே(பு.நே) ▷ 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3977)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், மகிமா, செந்தில் நடித்த
நெறஞ்ச மனசு
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-3976)

ராஜா யாழ்ப்பாணம்
*12 - 13 ஆம் திகதிகளில்*
விஜய், திரிசா, பிரகாஸ்ராஜ் நடிக்கும்
கில்லி
14 முதல்
இந்திய, இலங்கை ஒரேதின வெளியீடு
கமலஹாசன், மனிசா கொய்ராலா நடித்த
மும்பை Xபிரஸ்
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்
(சி-3980) பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால்**

யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய
உணவு வகைகள் வழங்கலுக்கான

**கோதுமை மா கேள்விகோரல்**

ஏப்ரல், மே, யூன் - 2005

01. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு மாதமொன்றிக்கு 400 Mt படி 1200 Mt கோதுமை மா விநியோகிப்பதற்காக கேள்விகள் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| விநியோகிக்க வேண்டிய தொகை | அளவு |
|---|---|
| 2005 ஏப்ரல் | 400 Mt |
| 2005 மே | 400 Mt |
| 2005 யூன் | 400 Mt |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.04.11 ஆம் திகதி தொடக்கம் 2005.04.26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

02. கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக ( விலை கேள் முறி -Bid Bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01 Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

03. பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமோ யாழ் செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக ( கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005.04.27 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப 3.15 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.

04. நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

05. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10 வீதம் மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல் படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

06. கூட்டுறவு அபிவிருத்தி வர்த்தக மற்றும் பாவனையாளர் நுகர்ச்சியாளர் திணைக்களத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மாவாக இருத்தல் வேண்டும்.

07. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 30 நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

*க.கணேஷ்,*
*தலைவர் / அரச அதிபர்,*
*மாவட்ட கேள்விச் சபை /*
*மாவட்ட செயலகம்.*
*யாழ்ப்பாணம்.*

C C/4044)

# இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் பெயரையும் சின்னத்தையும் மாற்ற தீர்மானம்!

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது பெயரையும், சின்னத்தையும் மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கட்சியின் பிரதிநிதிகளின் மாநாடு ஒன்றை நடத்தி, அதில் இறுதித் தீர்மானம் எடுக்க விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உயர்மட்டத் தலைவர்களுள் ஒருவர் கடந்தவாரம் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துக்குச் சென்று அறிவித்திருப்பதோடு, அது தொடர்பாகக் கருத்துக்களை வழங்கும் சந்தர்ப்பம் வழங்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுக்குக் கடிதம் ஒன்றையும் கையளித்துள்ளார்.

தற்பொழுது தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கட்சிகள், கட்சிகளின் சின்னங்கள் அடங்கிய வர்த்தமானியும் அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டது எனத் தெரிய வருகிறது.

அனைத்து மக்கள் தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக தேசிய அரசியல் கட்சியாகக் கட்டி எழுப்புவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்திருப்பதாக அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

ஆகையால் கட்சியின் சின்னத்தையும் மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்களை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாக ஆரம்பிக்கப்பட்டாலும் தற்பொழுது சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து மக்களையும் காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார் (தே)

# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு; ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இதுவரை உரிய பதவி உயர்வுகள் வழங்காததையிட்டு முதற்தடவையாக 5800 க்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்களின் கையொப்பங்களுடன் கூடிய கடிதம் ஒன்றை, ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு பொலிஸ் பரிசோதகர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

பொலிஸ் பரிசோதகர்களின் பொதுச் சபைக் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உப பரிசோதகர் ஒருவருக்கு தற்போதுள்ள நிலையில் 25 வருடங்கள் சென்றும் உதவி பொலிஸ் அதிகாரியாக வர முடியாது என ஜனாதிபதிக்கு கையளிக்கப்படவுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆங்கிலேய நிர்வாக முறையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட பதவி உயர்வு முறை மீண்டும் செயற்படுத்தப்பட வேண்டுமென சங்கத்தின் முழு அங்கத்தவர்களும் கேட்டுக் கொண்டதாக பொலிஸ் பரிசோதகர்களின் தலைவர் குணரட்ண தெரிவித்தார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கும் அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில்

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாயிசேவ நிறுவனத்தால் உபகரணங்கள்

பகவான் ஸ்ரீ சத்தசாயிசேவ சமித்தி அமைப்பு திருகோணமலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 11 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங் களை வழங்கியுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட திருகோணமலை வீரநகரைச் சேர்ந்த 34 மீனவக் குடும்பங்களுக்கு 6 லட்சம் ரூபா பெறுமதியான மீன்படி உபகரணங்களையும், 8 மீனவர்களுக்கு 120 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளி இணைப்பு இயந்திரத் திருத்தவேலைகளையும் குச்சவெளி, வெருகல் ஆகிய பகுதிகளையும் சேர்ந்த வறுமைக் கோட்டின்கீழ் வாழும் 24 பெண்களுக்கு தையல் இயந்திரங்களையும் வழங்கியுள்ளது.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 5 பாடசாலைகளுக்கு குடிநீர் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்ததுடன், 691 பாடசாலை பிள்ளைகளுக்கு பாடசாலைச் சீருடைத் துணிகளையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.








சமாதான முன்னெடுப்பை அரசாங்கம் தீவிரப்படுத்த வேண்டுமெனக் கோரி - வவுனியாவில் நேற்று பொது அமைப்புக்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் சில காட்சிகள்...

விலைவாசி உயர்வினால்

# புதுவருடத்தை கொண்டாட முடியாத நிலையில் மக்கள்!

எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியில் மக்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை கொழு பில் இடம்பெற்ற ஊடகவியலாள மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - பாரியளவில் விலைவாசிகள் உயர்ந்து வருவதால் எதிர்வரும் புத்தாண்டை மக்கள் கொண்டாட முடியாத நிலையில் உள்ளனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்கப் போவதாகவும் உற்பத்தியை அதிகரிக்கப் போவதாகவும் கூறிக்கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசைப் பொறுப்பேற்றது.

ஆனால் இந்த வாழ்க்கைச் செலவு 700 வீதத்தால் அதிகரித்துள்ளது. மக்களுக்கு உறுதியளிக்கப்பட்ட சம்பள உயர்வு இதுவரை வழங்கப்படவில்லை.

உறுதியளிக்கப்பட்ட தொழில் வாய்ப்பு அனைத்தும் பொய்யாகி உள்ளது. இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே நாட்டை மீட்க முடியும்.

இதேவேளை அரசாங்கத்துக்கும் ஜே.வி.பிக்கும் பாரிய கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. பொதுக் கட்டமைப்பு, சமஷ்டி ஆட்சி போன்ற விடயங்களில் முற்றிலும் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

ஆனால் நாட்டு மக்கள் எந்த நிலைக்கு உட்பட்டாலும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தேவையாகவுள்ளது அரசாங்கத்தைத் தக்க வைப்பதே என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

# பொலிஸாரைத் தாக்கிய குழு இனங்காணப்பட்டுள்ளது!

## நெவில் விஜயசிங்க தெரிவிப்பு

(கல்முனை)

கல்முனையில் நிவாரணப் பொருட்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரைத் தாக்கிவிட்டு அவர்களிடமிருந்த துப்பாக்கிகளை எடுத்துச்சென்ற கிழக்கில் செயற்படும் பிற்போக்குவாதிகள் குழுவொன்று - இனங்காணப்பட்டுள்ளதாக கிழக்குப் பகுதிக்கான பொலிஸ் மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

கல்முனைக்குடி மண்டபத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த நிவாரணப் பொருட்களைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தாக்கிவிட்டு அவர்களிடமிருந்த ரி - 56 ரகத் துப்பாக்கிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் நடத்திய விசாரணைகளின் போது பல தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸ்மா அதிபர் இந்தச் சம்பவத்தின் பின்னணியிலிருந்த முஸ்லிம் இளைஞர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தப் பிற்போக்குவாதக் குழுவினரை அந்தப் பிரதேசத்தின் அரசியல் வாதி ஒருவர் வழிநடத்தி வருவதாகவும் தமக்கு உளவுத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும்

# பாம் எண்ணையை விடுவிப்பதற்கு சுங்க அதிகாரிகள் லஞ்சம்பெற்றனர்!

(கொழும்பு)

மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாம் எண்ணையை விடுவிப்பதற்கு, சுங்க இலாகாவின் உயர் அதிகாரிகள் 210 லட்சம் ரூபா லஞ்சம் பெற்றுள்ளனர் என்று சுங்கப் பகுதி தொழிற்சங்கம் - ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளது.,

கொழும்பு ஐந்து நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றில் இந்தக் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ளதெனவும், இதன் போது பதிவு செய்யப்பட்ட ஒலிப் பதிவு நாடாவும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கொடுக்கல் வாங்கல்களில் ஜனாதிபதிக்கு நெருங்கிய வர்த்தகர் ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதால் நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தடையாகவுள்ளது.

12 கோடி ரூபா பெறுமதியான 2940 மெற்றிக் தொன் பாம் எண்ணெய் மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்தபோது குறைந்த மதிப்பீட்டுவரி கணிக்கப்பட்டதால் சுங்கத் திணைக்களத்துக்கு 170 லட்சம் ரூபா கிடைக்காமல் போயுள்ளது.

இது தொடர்பாக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்காது இருப்பதற்கு 210 லட்சம் ரூபா லஞ்சம் கொடுக்க வேண்டும் என சுங்க அதிகாரிகள் கேட்டதாகவும் இதன் பிரகாரம் முற்பணமாக 175 லட்சம் ரூபா சுங்க அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றும் - இது தொடர்பாக தொழிற்சங்கத்தின் லஞ்ச விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### தேசிய ஆலோசனை சபை அடுத்தமாதம் கூடும்

(கொழும்பு)

தேசிய சமாதான ஆலோசனை சபை ஐந்து மாதங்களுக்குப் பின்பு ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் அடுத்த மாதத்துக்குள் கூட இருப்பதாக அரசாங்க சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை மீண்டும் மறுசீரமைக்கும் போது விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கு அதிக கவனம் செலுத்துவது அதன்மூலம் எதிர்கொள்ளும் சமாதான நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்களின் உதவியைப் பெற்றுக்கொள்வது குறித்து இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மே 3 ஆம் திகதி மதக் குழுவும், 15 ஆம் திகதி அரசியல் குழுவும் கூடுவதற்கு சமாதான செயலகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்காக மதத்தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் அழைப்பதற்கு சமாதான செயலகம் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

### கல்வி அமைச்சை பாதுகாக்க பாதுகாப்பு அதிகாரி நியமனம்

(கொழும்பு)


கல்வி அமைச்சின் நடவடிக்கைகளை பாதுகாப்பதற்கென பாதுகாப்பு அதிகாரி ஒருவரை நியமனம் செய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளார்.

மாணவர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களால் முன்னெடுக்கப்படும். ஊர்வலங்கள், மறியல் போராட்டங்களின் போது அமைச்சின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்காகவே இந்தத் தீர்மானம் எடுத்துள்ளதாக தெரிய வருகின்றது.

கல்வி அமைச்சுக்கான அதிகாரிகளை நியமனம் செய்வதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவையிடம் பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

நியூஸிலாந்துடனான டெஸ்ட்

# 211 ஓட்டங்களுக்குள் இலங்கை சுருண்டது!



(வெலிங்டன்)

நியூஸிலாந்து அணிக்கு எதிராக நேற்று வெலிங்டனில் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 211 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபட முடிவுசெய்தது. இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியதுமே அதிர்ச்சி காத்திருந்தது.

அணி ஓட்டமெதையும் பெறாத நிலையிலேயே - அத்தப்பத்து ஆட்டமிழந்து சென்றார். பின்னர் அடுத்தடுத்து - விக்கெட்டுக்களை இலங்கை அணி பறிகொடுத்துக் கொண்டிருந்தது. அணியின் ஸ்கோர் 86ஐ எட்டுவதற்குள் ஏழு விக்கெட்டுக்கள் இழக்கப்பட்டன.


மார்ட்டினின் பந்துவீச்சில் அகப்பட்டு இலங்கை அணி திணறிக் கொண்டிருந்தநிலையில் - திலான் சமரவீரவும், உபுல் சந்தனவும் அணியை ஓரளவுக்கு கௌரவமான நிலைக்குக்



கொண்டுசென்றனர்.

அணியின் ஸ்கோர் 175ஐ எட்டியபோது - சந்தன ஆட்டமிழந்தார். இவர் 82 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 41 ஓட்டங்களை எடுத்தார்.

இதன்பின் மஹ்ரூப் ஆட்டமிழக்க மாலிங்க களமிறங்கினார். கடைசி



விக்கெட்டாக 8 பவுண்டரிகளுடன் 73 ஓட்டங்களைப் பெற்றிருந்த திலான் சமரவீர ஆட்டமிழந்தபோது இலங்கை அணி 211 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஜயசூரிய -22, சங்கஹார -16, ஜயவர்த்தன -1, டில்ஷான் -9, கலவிற்றிகொட -7, வாஸ் -5, மாலிங்க -4 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் மார்ட்டின் -6, அஸ்ரில் -3, பிராங்ளின் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதையடுத்து நியூஸிலாந்து அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கி 11 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 52 ஓட்டங்களை எடுத்தது. கமிங் 14, மார்ஷல் 24 ஓட்டங்களை எடுத்தனர்.

# மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக தென்னாபிரிக்கா நிதான ஆட்டம்!



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட் இழப்புக்கு 369 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவதுநாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 3 விக்கெட் இழப்புக்கு 182 ஓட்டங்கள் என்ற நிலையிலிருந்து ஆட்டத்தைத் தொடர்ந்தது.

தென்னாபிரிக்க அணி வீரர்கள் சிமித் - சொண்டேகி ஜோடி நிலைத்து நின்று நிதானமாக ஆடியது. இதனால் ஸ்கோர் உயர்ந்து 222ஐத் தொட்டது. இந்தநிலையில் நான்காவது விக்கெட் வீழ்த்தப்பட்டது.

சொண்டேகி 14 ஓட்டங்களுடன், கொலின்ஸின் பந்துவீச்சில் போல்டாக, கிப்ஸ் களமிறங்கினார். இவர் சிமித்துடன் இணைந்து நிதானமாக ஆடி அணியின் ஸ்கோரை 274ஆக உயர்த்தினார்.

அந்தவேளையில் அடுத்த விக்கெட்டாக சிமித்தை எல்.பி.டப்ளியூ முறையில் வீழ்த்தினார் ஹின்ட்ஸ். சிமித் 313 பந்துகளில் 17 பவுண்டரிகளுடன் 148 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்ததாக கிப்ஸுடன் பிரின்ஸ் இணைந்து கொண்டார். எனினும் அணியின் ஸ்கோர் 303ஐ எட்டியபோது - கிப்ஸும் ஆட்டமிழந்தார். 34 ஓட்டங்களை எடுத்தநிலையில் கொலின்ஸின் பந்துவீச்சில் போல்டாகி வெளியேறினார்.

இதன்பின்னர் பிரின்சும், பௌச்சரும் இணைந்து ஆடி அணியின்



ஸ்கோரை 369ஆக உயர்த்திய நிலையில் மூன்றாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஆட்டநேரமுடிவில் - பிரின்ஸ் 40 ஓட்டங்களுடனும், பௌச்சர் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# விளையாட்டு

## பல்கலைக்கழக கிண்ண கிரிக்கெட்

## இரண்டாம் சுற்று ஆட்டங்களில் பற்றீசியன், பல்கலை அணிகள் வெற்றி



யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையால் அழைக்கப்பட்ட நான்கு கழகங்களிடையே நடத்தப்பட்டுவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் பற்றீசியன் விளையாட்டுக் கழகமும் பல்கலைக்கழக அணியும் வெற்றிபெற்றன.

காலை நடைபெற்ற ஜங்ஸ்ரார் அணிக்கெதிரான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுக் கழகம் 29 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுஜீவன் 46 ஓட்டங்களையும், நயின்ஸ், அஜித், ஜக்சன், விநோதன் ஆகியோர் முறையே 16, 15, 12, 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜங்ஸ்ரார் அணி வீரர்கள் ரஞ்சித், கிருஷ்ணசந்திரா ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும், சுஜீவன் 2, சுரேஸ்குமார் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 27 ஓவர்களில் 130 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும்இழந்ததால் -



25 ஓட்டங்களால் பற்றீசியன் அணி வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் சுஜீவன் 30, பிரதீபன், கிருஷ்ணசந்திரா, துஷ்யந்தன், சுரேஸ்குமார் முறையே 27, 12, 11, 11 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

மாலை நடைபெற்ற ஆட்டத்தில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 27.2 ஓவர்களில் 104 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் றொகான் 19, நிஷாந்தன், பிரசாத் ஆகியோர் தலா 11 ஓட்டங்களையும், கார்த்தீபன், சுதர்சன், காண்டீபன் ஆகியோர் தலா 7 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சர்வானந்-3, ஜனார்த்தனன் -2, கௌரிபாகன் -2, ரவிசங்கர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 21.5 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 106 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் சர்வானந் 34, ரஜீவன் 16, தனுஷ்காந்தன் 14, ஜனார்த்தனன், கௌரிபாகன் ஆகியோர் முறையே ஆட்டமிழக்காமல் 21, 5 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பிரசாத், பாலேந்திரா, பிரகாஷ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் 3ஆம் சுற்று ஆட்டங்கள் நாளை நடைபெறவுள்ளன. (58)

# மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட்: சம்பியனானது அவுஸ்ரேலிய அணி!



(பிரிடோரியா)

மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 98 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி, ஐந்தாம் முறையாக சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA

தென்னாபிரிக்காவில் எட்டாவது பெண்கள் உலகக்கிண்ண கிரிக்கெட்




போட்டியில் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் பிரிடோரியாவில் நடந்தது. முதல் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இந்தியாவும், 4 முறை சம்பியனான அவுஸ்ரேலியாவும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது. எடுத்த எடுப்பிலேயே இந்திய வீராங்கனைகள் அதிர்ச்சி கொடுத்தனர். 35 வயதான கப்டன் பெளின்டா கிளார்க் 19, கெய்ட்லி 5 ஓட்டங்களுடன் வெளியேறினர். இதற்குப்பின் ரோல்டன், ஜோன்ஸ் இணைந்து மூன்றாவது விக்கெட்டுக்கு 40 ஓட்டங்களைச் சேர்த்தனர். ஜோன்ஸ் 17 ஓட்டங்களுக்கு அவுட்டாக, அவுஸ்ரேலியா 3 விக்கெட் இழப்புக்கு 71 ஓட்டங்களை எடுத்துத் திணறியது. இந்தக் கட்டத்தில் இந்தியாவுக்கு வாய்ப்பு இருந்தது.

ஆனால், சிதாலேகர் ஒத்துழைப்புத்தர நிலைமையை மாற்றினார் கரேன் ரோல்டன். இவர்கள் இருவரும் 139 ஓட்டங்கள் சேர்த்து அணிக்கு மகத்தான ஸ்கோர் பெற்றுத்தந்தனர்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சிதாலேகர் 55 ஓட்டங்களை எடுத்தார். அபாரமாக துடுப்பெடுத்தாடிய ரோல்டன் சதமடிக்க, அவுஸ்ரேலியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 215 ஓட்டங்களை எடுத்தது. 11 பவுண்டரிகளுடன் 107 ஓட்டங்களை விளாசிய ரோல்டன்




கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்தியத் தரப்பில் நீது டேவிட், கோஸ்வாமி, அமிதா சர்மா, தர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பின்னர் கடினமான இலக்கை விரட்டிய இந்திய அணி படுமோசமான தொடக்கத்தைக் கண்டது. வந்த வீராங்கனைகள் எல்லாம் அவுஸ்ரேலியாவின் துல்லிய களத்தடுப்பினால் வெளியேறினர். ஜெயா சர்மா 5, அஞ்சும் சொப்ரா 10, தர் 6, கலா 3 ஓட்டங்களுக்கு ரன் அவுட்டாகி ஏமாற்றமளித்தனர்.

கொஞ்சம் தாக்குப்பிடித்த அஞ்சு ஜெயின் 29 ஓட்டங்களுடன் வெளி



யேறினார். நியூஸிலாந்துக்கு எதிரான அரையிறுதியில் 91 ஓட்டங்களை விளாசிய இந்திய கப்டன் மிதாலி ராஜும் சோபிக்கவில்லை. முழங்கால் காயத்தையும் பொருட்படுத்தாது களமிறங்கிய இவர் 6 ஓட்டங்களையே எடுத்தார்.

கடைசி நேரத்தில் போராடிய அமிதா சர்மா 22 ஓட்டங்களை எடுத்தார். இறுதியில் இந்தியா 46 ஓவரில் 117 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து, இரண்டாம் இடத்துடன் திருப்திப்படவேண்டியதாயிற்று.

சதமடித்த அவுஸ்ரேலியாவின் ரோல்டன் ஆட்டநாயகி, தொடரின் நாயகி என இரட்டை விருதுகளையும் அள்ளிச் சென்றார்.

# சுனாமியால் பாதிப்படைந்த மக்களுக்கு முத்திரையை தவிர எந்த உதவியுமில்லை

## கரவெட்டி பிரதேச மக்கள் தெரிவிப்பு

(வடமராட்சி)

சுனாமி அனர்த்தத்தால் தொழில் வாய்ப்புகளை இழந்த கரவெட்டிப் பிரதேச மீனவர்களுக்கு, போதிய நிவாரண உதவிகளை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்கள் எவையும் முன்வராமையால், அந்தப் பிரதேச மீனவர்கள் தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாசத்தின் அங்கத்துவம் பெற்ற சங்கங்களில் ஒன்றான கரவெட்டி பிரதேச மீனவர் சங்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் தொண்டமானாறு மற்றும் வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் நீரேரிவரை - சிறு தூண்டில்கள் மற்றும் வீச்சுவலைகள் என்பவற்றைப் பயன்படுத்தி, தொழில் செய்து வந்துள்ளனர்.

சுனாமியின் தாக்கத்தின்போது இவர்களது ஜீவனோபாய தொழில் உபகரணங்கள் யாவும் அடித்துச் செல்லப்பட்டன. இதன் காரணமாக மேற்கொண்டு இவர்களால் தொழிலை ஆரம்பிக்கமுடியாமல் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் சுனாமி நிவாரண முத்திரையை மட்டுமே நம்பி தமது வாழ்க்கையைக்கொண்டு செல்லும் இவர்களுக்கு - இதுவரை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் வேறு எந்த உதவிகளும் வழங்கப் படவில்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் பல்வேறு உதவிகள் வழங்கப்படுகின்றபோதிலும், இந்தப் பிரதேச மீனவர்களுக்கு எந்தவித உதவிகளும் கிடைக்காமையால் இவர்கள் மிகவும் விசனம் அடைந்துள்ளனர்.

இதனால் இந்தக் குடும்பங்கள் பல்வேறு வாழ்வியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் தம்மையும் கவனத்திற்கொண்டு, உதவிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சென்.ஜேம்ஸ் தேவாலயத்தினால் பசான் வாசிப்புப் போட்டி முடிவுகள்

(குருநகர்)

குருநகர் சென்.ஜேம்ஸ் தேவாலய திரு இருதய சபையின் நூற்றாண்டு விழாவை ஒட்டி, குடாநாட்டு பங்குகளுக்குட்பட்ட பரவலாக நடத்தப்பட்ட பசான் வாசிப்புப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த 20 ஆம் திகதி சென்.ஜேம்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் - யாழ்.மறை மாவட்டத்திலிருந்து போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வு - குருநகர் ஆலய பங்குத்தந்தை ஆர்.எச்.சகாயநாயகம் அடிகள் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் அருட்தந்தை அ.பி.ஜெயசேகரம் அடிகளார், அதிபர் ம.செபஸ்தியாம்பிள்ளை, முன்னாள் அதிபர் அல்பிரட் ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் பெயர் விபரம் வெளியிடப் பட்டுள்ளது.

முதலாம் இடம் - மெடோன மரியதாஸ் (சென்ஜேம்ஸ் வீதி குருநகர்), இரண்டாம் இடம் - றெயானி பிலிப் (19, 6 ஆம் குறுக்கு வீதி, குருநகர்), மூன்றாம் இடம் - இராசநாயகம் ராஜ்றெனூசியஸ் (11, சென்.ஜேம்ஸ் வீதி குருநகர்), நான்காம் இடம் - அலெக்சாண்டர் அனற் நிசாந்தன் (லூர்த்து அன்னை போயிட்டி, இளவாலை), ஐந்தாம் இடம் அருள் நேசன் மேரி டிலக்ஸா (புனித கயித்தார் கோயிலடி, மாரீசன்கூடல்).

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள நூற்றாண்டு விழாவில் வழங்கப்படவுள்ளது.

இந்த நூற்றாண்டு விழாவில் மலர் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. (206)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே வருடாந்தம் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி - எதிர்வரும் 16,17 ஆம் திகதிகளில் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் எதிர்வரும் 18,19,21 ஆம் திகதிகளில் இதே மைதானத்தில் இடம் பெறுமென பிரதேச செயலக விளையாட்டுத்துறை அதிகாரி தெரிவித்தார். (91)

## உடற்கல்வி பணிப்பாளருக்கு பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தில் நீண்டகாலமாக உடற்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய அருணகிரிநாதர், வடக்கு - கிழக்கு மாகாணசபையின் திட்டமிடல் பிரிவுக்கு பதவி பெற்றுச் செல்கிறார்.

இவரது வெற்றிடத்துக்கு தென்மராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளராக இருந்த க.குமாரசாமி நியமிக்கப்பட்டுள்ளார். (58)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(பருத்தித்துறை)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் - சுனாமி அனர்த்தத்தாலும், யுத்தத்தாலும் பாதிக்கப்பட்டு சொந்த இருப்பிடங்களை இழந்து, பல்வேறு இன்னல்கள் மத்தியில் வாழ்கின்ற மக்களின் சுகவாழ்வைக் கருத்திற்கொண்டு - எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கை வடமராட்சிப் பகுதியிலுள்ள நலன்புரி நிலையங்களில் கடந்தமாத நடுப்பகுதியில் இருந்து நடத்தி வருகிறது.

எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் - தீவகம் உட்பட, யாழ்.குடாநாட்டின் சகல பகுதிகளில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக கிராம மட்டங்களில் குழுக்களை அமைத்தும், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் கிராம மட்டத்திலான இளைஞர் கழகங்கள் மிகவும் பின்தங்கிய, இனங்காணப் பட்ட பகுதிகள் போன்ற இடங்களிலுள்ள இளைஞர் - யுவதிகளை இலக்காகக் கொண்டு நடத்தி வருகிறது.

அத்துடன் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள தொண்டர்களுடன் இணைந்து, நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களின் தொற்றுநோய் அபாயத்தைத் தவிர்க்கும் பொருட்டு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஆரம்ப சுகாதார கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : உ.கவிநிலவன்
முகவரி : கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


## உதவிப்பொருட்கள் வழங்கல்

(சுதுமலை)

ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேல்ட் விசன் நிறுவனத்தால் அண்மையில் உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவிப் பொருட்களில் நுளம்பு வலைகள், கம்பளிப் போர்வை, குடிநீர் சுத்திகரிக்கும் குளிசை என்பவற்றைக் கொண்ட பொதிகள் வழங்கப்பட் டன.

இதேவேளை எதிர்வரும் 20 ஆம் திகதி ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறிப்பிட்ட நிறுவனத்தால் உதவிப்பொருட்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (44)

## விண்ணப்பப் படிவம் பற்றாக்குறை

யாழ்.பிரதேச செயலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்பப்படிவங்கள் - பற்றாக்குறையாகக் காணப்படுகிறது. இதனால் மக்கள் விண்ணப்பப் படிவத்தை விலைக்கு வாங்குவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.. (72)

## பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் - அரசடி ஞான வைரவர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக நிகழ்வு கடந்தவாரம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. ஆலய பரிபாலனசபையைச் சேர்ந்த இ.முத்துலிங்கம் ஞானவைரவர் வளர்ச்சிக்கு பங்காற்றியமைக்காக பரிபாலன சபைத் தலைவர் துஜிந்தனால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டார். (91)

## காணி அன்பளிப்பு

(நெல்லியடி)

கரவெட்டி யாக்கரு விநாயகர் வித்தியாலயத்துக்கு, பாடசாலைக்குச் சமீபமாகவுள்ள நபர் ஒருவர் - பாடசாலையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், 20 ஆயிரம் ரூபா பெறுமதியான காணியை வழங்கியுள்ளார்.

வித்தியாலயத்தின் அதிபர் வ.கணபதிப்பிள்ளையிடம் - பாடசாலைக்கு சமீபமாகவுள்ள தெடுத்தனைக் கிராமத்தைச் சேர்ந்த ஐயாத்துரை மார்க்கண்டு என்பவரே இந்தக் காணியை வழங்கியுள்ளார். (12)

## சிவாச்சார்யர் திலகம் பட்டம் வழங்கிக் கௌரவிப்பு

(நெல்லியடி)

கரவெட்டி கிழக்கு யாக்கரு விநாயகர் ஆலயத்தில் நீண்டகால மாகப் பூசைகளை நடத்திவரும் பிரதம சிவாச்சாரியார் சாரதா பீட சபாநாத குருக்களுக்கு, ஆலய பரிபாலன சபையினர் 'சிவாச்சாரியார் திலகம்' எனும் பட்டம் வழங்கிக் கௌர வித்துள்ளனர். அண்மையில் நடைபெற்ற ஆலயத்தின் தீர்த்தோற்சவ விழாவில் இவரது தீட்சை வழங்கிய குருவான யோகீஸ்வரக் குருக்கள் ஆசிவழங்கினார். (12)

## நாவலர் கலாசார மண்டபத்தில் பயில்நிலம் இதழ் அறிமுகவிழா

கொழும்பிலிருந்து வெளிவரும் 'பயில்நிலம்' மாத இதழின் அறிமுக நிகழ்வு- நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் , யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நூலின் ஆசிரியர் ந.பிரசாத் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை உலகத் தமிழர் வானொலி அறிவிப்பாளர் கு.வாசுகி நிகழ்த்தினார். நூலின் விமர்சனத்தை 'ஊடகவியலாளர் பார்வையில்' கவிஞர் தி.திருக்குமரன், 'மூத்தோர் பார்வையில் ' என்ற கருபொருளில் சட்டத்தரணி சோ.தேவராஜா ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை சட்டத்தரணி சோ.தேவராஜா வெளியிட்டுவைக்க, கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா செல்லத்துரை செல்வநாயகம் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் 'விடியலின் பாதைக்கே விழிப்பு' என்ற கவியரங்கு- 'தாயகம்' நூல் ஆசிரியர் க.தணிகாசலம் தலைமையில் அழ.பகிரதன், கு.பாரதி, பொ.கோபிநாத் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



சட்டத்தரணி தேவராசா வெளியிடுகிறார்.



அரங்கின் பிரமுகர்கள்



இந்த நிகழ்வில் கலந்து கொண்டோர்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் சுகாதாரத் திட்டம் தொடர்பான பயிற்சி!

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளையினரால் 'சமூக சுகாதார திட்டமிடல்' தொர்பான பயிற்சிப் பாசறை ஒன்று இந்தமாத இறுதியில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பாசறையில் பங்குபற்ற விரும்பும் தொண்டர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் தமது பெயர் விபரங்களை தமது பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அனுப்பிவைக்குமாறு யாழ்.மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பிரதேசசெயலர் பிரிவுகளில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கக் கிளையிலுள்ள தொண்டர்களே இந்தப் பயிற்சிப் பாசறையில் கலந்துகொள்ளலாம் என அவர் தெரிவித்தார். (91)

## முன்பள்ளி மாணவர்களுக்கான தமிழ், ஆங்கில பேச்சுத்திறன் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய வழிகாட்டலில் நடைபெற்ற யாழ்ப்பாண பிரதேச முன்பள்ளிகளுக்கு இடையிலான தமிழ், ஆங்கில மொழிப் பேச்சுத்திறன் போட்டி - நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு யோ.டனவே தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் - தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை ஞானக் குழந்தை கல்விக்கழக இயக்குநர் ஜெயபால சிங்கம் ஏற்றிவைத்தார்.

முன்பள்ளி மேம்பாட்டு நிறுவனக் கொடியை யாழ்.முன்பள்ளி இணைப்பாளர் சி.கார்த்திகாயினி ஏற்றிவைத்தார். தொடர்ந்து இயற்கையின் சீற்றத்தால் உயிர்நீத்த முள்பள்ளி ஆசிரியர், சிறார்கள், பொதுமக்களுக்குமான மௌன அஞ்சலி நிகழ்த்தப் பட்டது.

இந்த நிகழ்வில் - 38 முன்பள்ளிகளில் இருந்து கலந்துகொண்ட மாணவர்களின் பேச்சுத்திறன் போட்டி இடம் பெற்றது.

பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து, போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## பல்சுவைச் சிதறல்

பல்சுவை அரங்கு

# புராதன டைனசோர் படிவம் மீட்பு

சிறிய கறையான் உண்ணி விலங்குகள் -டைனசோர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து, தற்போது பாறைப்படிவுகளாக மீட்கப்பட்டுள்ளன. 150 மில்லியன் வருடங்களுக்கு முன் இவை வாழ்ந்துள்ளன.




இவை தற்போதுள்ள கறையான் உண்ணி விலங்குகளின் மூதாதைகள் எனப்படுகிறது. இவற்றின் பற்கள் எனாமல் கவசமின்றிக் குழிவுடன் கூடியதாகவும், குழிபறிக்கும் வசதியாக முன் கால்களின் எலும்புகள் வளைவாகவும் காணப்படுகின்றன.

டைனசோர் இனங்களான பிராக்கியோசோரஸ், ஸ்ரெகோசோரஸ், அலோசோரஸ் என்பவற்றுடன் ஒப்பீட்டு ரீதியில் சிறிய விலங்காக கூடவே வாழ்ந்துள்ளனவாம்.

சீனா, அமெரிக்கா அகழ்வாராய்ச்சியாளர்கள் இணைந்து மேற்கொண்ட அகழ்விலேயே இந்தப் புராதன சிறிய விலங்கின் படிமங்கள் கிடைத்துள்ளன.

# செல்லிடப் பேசிக்காக முண்டியடித்த டாக்காவாசிகள்




செல்லிடத் தொலைபேசிகளின் பாவனையை அதிகரிக்கும் பொருட்டு, பங்களாதேஷ் அரசின் ரெலிரோக் நிறுவனம் வழங்கிய சலுகை விலையில் போன் என்ற திட்டம் நல்ல வெற்றியைத் தந்துள்ளதாம்.

இதற்கென வழங்கிய காலக்கெடு முடிந்த பின்னரும்கூட, டாக்காவில் விண்ணப்பப் படிவங்களைத் தரகர்களிடமிருந்து சட்டவிரோதமாகப் பெற முயன்ற பலர் பங்களாதேஷ் பொலிஸாரால் தடியடி செய்து விரட்டப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து விண்ணப்பப்படிவம் கிடைக்காத பலர் - நாடு தழுவிய போராட்டங்களை நடத்தி, தம் ஆத்திரத்தை வெளியிட்டனர். ரெலிரோக் ஒரு சில டசின் விண்ணப்பங்களே வழங்கின. ஆனால் வரிசையில் நின்றதோ ஐயாயிரம் பேர் என டாக்கா வர்த்தகர் ஒருவர் பொருமினார்.

இத்தகைய ஓர் நிலையைத் தாம் எதிர்பார்த்திருக்கவில்லை என்கின்றனர் டெலிரோக் நிறுவனத்தினர்.

# குழந்தையின் டி.என்.ஏ விபரம் பேணத் திட்டம்



பிறக்கும் ஒவ்வொரு குழந்தைகளிலிருந்தும் டி.என்.ஏ விபரங்களை பெற்றுப் பேணும் பிரிட்டனின் திட்டத்தை, பிறப்புரிமையியல் நிபுணர்கள் நிராகரித்துள்ளனர்.

இது செலவு கூடிய ஓர் முறை என்பதுடன், இது சமயம் சார்ந்த சர்ச்சைகளையும் ஏற்படுத்தலாம் என அவர்கள் கூறுகின்றனர்.

எனினும், இப்படி டி.என்.ஏ விபரங்களைப் பேணுவதன் மூலம் - குழந்தை எதிர்காலத்தில் எதிர்நோக்கக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பளிக்கக்கூடிய திட்டம் உருவாக்க முடியும் என இந்தத் திட்டத்தை ஆதரிப்பவர்கள் கூறுகின்றனர்.

இன்னும் ஐந்தாண்டுகளின் பின்னர் இது குறித்து இறுதி முடிவு செய்யலாம் எனத் தீர்மானித்து - இப்போதைக்குத் திட்டம் கைவிடப்பட் டுள்ளது.


எதிர்காலத்தில் டி.என்.ஏ விபரம் சேகரிப்புக்கான தொழில்நுட்பச் செலவுகள் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மனிதனல்ல மிருகங்களும் சிரிக்கும்



சிரிக்கத் தெரிந்த விலங்கு மனிதன் என்ற கதையெல்லாம் மலையேறிவிட்டது என்கிறார் அமெரிக்க ஓகியோ பல்கலைக்கழக பேராசிரியர் ஜக்பான்க்செப்.


நாயும், எலியும் கூட தமது மொழியில் சில சமயம் சிரிக்கின்றன என அவர் சயன்ஸ் என்ற சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.



நாய்கள், சிம்பன்சிகள், எலிகள் என்பன தாம் மகிழ்வாக இருக்கும் போது தமது மொழிக்கட்டமைப்புக்கு ஏற்ப சிரிப்பொலிகளை வெளிவிடுகின்றனவாம். இத்தகைய கட்டமைப்புடன் கூடிய சிரிப்புகளைத்தான் மனிதனின் கூர்ப்பு வழியின் மூதாதையர்களும் காட்டுவிலங்குகளாக இருந்தபோது வெளியிட்டனர் என்கிறார் அவர்.

சிரிப்புக் காரணமான மூளையின் பகுதி ஆதிமுதல் அனைத்து விலங்குகளுக்கும் பொதுவானதாகவே இருந்துள்ளது எனக் கூறப்படுகிறது.

# சல்மன் மீன்களில் ஒட்டுண்ணி



கனடாவில் ஒட்டுண்ணி கடல் தெள்ளின் அதிகரிப்பால் சல்மன் மீன்கள் பாதிப்புக்குளாகி வருகின்றன.

பண்ணைகளில் வளர்க்கப்படும் சல்மன் மீன் முதல்-கடலில் வாழும் சல்மன் மீன் வகைகள் வரை இந்த ஒட்டுண்ணியால் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. தாக்குதலின் அளவு முன்பு எதிர்பாக்கப்பட்டதிலும் அதிகமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த ஒட்டுண்ணித்தெள்ளினால் இளம் சல்மன் மீன்களில் 73 சதவீதமானவை தாக்கப்பட்டிருப்பதாக ஆய்வு ஒன்று கூறுகிறது.

கிரஸ்டேசிய வகுப்பைச் சேர்ந்த இந்த ஒட்டுண்ணி - ஒரு மீனில் இருந்து மற்றையதற்கு வேகமாகப் பரவக்கூடியதாம்.




மீன் உள்ளெடுக்கும் உணவைவிட, இந்த ஒட்டுண்ணி மீனை உறிஞ்சியெடுக்கும் வேகம் அதிகம் என்பதால், இது மீனை உயிரோடு கொல்லும் செயல்முறைக்கு ஒப்பானதாக இருக்கிறது.

சிறிய மீன்கள் விரைவில் இறப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரிட்டனில் கைமீறும் காபனீரொட்சைட்




பிரிட்டனின் காபனீரொட்சைட்டின் செறிவு அதிகரித்து வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. பச்சைவீட்டு விளைவைத்தந்து சூழலை வெப்பமாக்கும் இந்தக் காபனீரொட்சைட்டின் செறிவு கடந்த ஆண்டு இருந்ததை விட, தற்போது 1.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இதனால் பிரிட்டிஷ் அரசு மீது எதிர்க் கட்சிகளும், சூழல் ஆர்வலர்களும் கடுப்பாகியுள்ளனராம். இது அரசின் கையை மீறி அனைத்தும் செல்வதையே காட்டுவ்தாக லிபரல் கட்சியின் சூழல் பிரிவு செயலாளர் நோர்மன் பேகர் விசனப்படுகின்றார்.

ஜப்பானின் Kyoto வில் நடைபெற்ற சூழல் மாநாட்டில் வளியில் காபனீரொட்சைட்டின் அளவை வெளியிடுதலைக் குறைப்போம் என்று கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை நாமே மீறும் செயலாகும் என்கிறார் அவர்.

## திரை விமர்சனம்

# குருதேவா



புதிய பாதை படத்தின் தழுவல் தான் இந்தப்படம். நல்லவன் ஆனால் தாதா இதுதான் ஆகாஷ். ஒரு பிடிப்பில்லாமல் காட்டாறு போல் வாழ்ந்துகொண்டிருக்கும் ஆகாஷ் வாழ்க்கையில் வருகின்றார் பிரணதி. தனது வாழ்க்கையை ஒரு புதிய பாதையில் மாற்றுகிறார் ஆகாஷ்.

ஆனால், பொறுத்த நேரத்தில் இந்தக் காதல் ஒரு நாடகம் தான் என்று கூறி ஏமாற்றுகின்றார் பிரணதி. இதன் பிறகு நடந்தது என்ன? அதுதான் மீதிக்கதை.

டப்பிங் குரலுடன் ஆகாஷ் நன்றாகவே நடித்திருக்கிறார். ஆனால் பிரணதியுடைய நடிப்பு இல்லையென்றே கூறவேண்டும். அந்தளவுக்கு அவர் படத்தில் நடிக்கவேயில்லை. ஆகாஷ்சுடைய குருவாக நாசர் தன்னுடைய நடிப்புத்திறமையைக் காட்டியிருக்கிறார்.




கதாநாயகனின் நகைச்சுவைக் குழுவாக வருகிறார் தாமு, வையாபுரி, முத்துக்காளை ஆகியோர். ஆனாலும் சில இடங்களில் நகைச்சுவைக்குப் பதில் கடித்திருக்கின்றார்கள். இசை சபேஸ் - முரளி.

தேவாவை மிஞ்சி இசையமைத்திருக்கிறார்கள். படப்பிடிப்பாளர் ஆர். மதியுடைய ஒளிப்பதிவு மிகவும் தரமாக உள்ளது. இயக்குநர் ஜாபருடைய கதை இயக்கத்தில் ஒரு பெரிய தொய்வு தெரிகிறது.

'குருதேவா - தோல்வியான குருஷேத்திரம்'.

-. நிஷாந்தி -

# மீண்டும் உயிர்பெறும்காட்டுப் பூனைகள்



ஸ்பெயினில் உள்ள டொனானா தேசிய விலங்குப் பூங்காவில் பிறந்த மூன்று சைபீரிய ன் காட்டுப் பூனைக்குட்டிகளால் இந்த அரிய இன காட்டுப்பூனைகள் Lynx உலகிலிருந்து எதிர்காலத்தில் அழிந்துவிடும் எனக் காணப்பட்ட அச்சம் நீங்கியுள்ளது.


தென் ஸ்பெயினில் நடைபெறும் விசேட இனவிருத்தித் திட்டத்தின் கீழேயே இந்த அரிய காட்டுப் பூனைகளின் வம்சம் மீண்டும் துளிர்விட்டுள்ளது.

உலகில் அரிதாகிவரும் விலங்குகள் பட்டியலில், அடங்கியுள்ள இந்தக் காட்டுப் பூனைகள் ஸ்பெயினிலும், போர்த்துக்கல்லிலும் மட்டுமே காணப்படுகின்றன.

இன்னும் ஐந்து ஆண்டுகளில் இந்த இனம் இல்லாதொழிந்து விடப்போவதாக, முன்னதாக உலக வன உயிர் பாதுகாப்பு நிதியகம் எச்சரித்திருந்தது. இன்று இந்த இனத்தைச் சேர்ந்த 100-120 காட்டுப் பூனைகளே உயிருடன் உள்ளன.

# எலும்பு மூட்டுகளுக்கு அதிர்ச்சி உறிஞ்சி சேர்வை

ஓமோன் சிகிச்சை மூலம் ஆர்தரைட்டிஸ் நோயைக் குணப்படுத்த முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அமெரிக்க, அவுஸ்ரேலிய வைத்திய குழுவினர் Aggrecan என்ற சேர்வையைக் கொண்ட ஓமோனை




பாதிக்கப்பட்ட கால் மூட்டு கசியிழையப் பகுதியினுள் செலுத்துவதன் மூலம், அதன் இரண்டு எலும்புகள் மூட்டப்படும் மூட்டில் அதிர்ச்சி உறிஞ்சியாக Shock a Borber செயற்படும் என்பதைக் கண்டறிந்துள்ளனர்.

இது தொடர்பாக இவர்கள் எலியில் செய்த ஆய்வுகள் தொடர்பான விபரங்கள் நேச்சர் என்ற சஞ்சிகையில் வெளிவந்துள்ளது.

இயற்கையாகவே மூட்டுப் பகுதிகளில் Aggrecan நிறையவே உள்ள போதிலும், இவை இன்னோர்வகை ஓமோன்களாக Aggrecanses இனால் அழிக்கப்படுகிறது. இதனால் மூட்டுப் பகுதி கசியிழையங்கள் தம் அதிர்ச்சி உறிஞ்சித்தன்மையை இழக்கின்றன.


# படைத்தவனே அழிக்கவும் வேண்டும்

இலத்திரனியல் சாதனங்கள் பழுதடைந்து, வாடிக்கையாளர்களால் கைவிடப்பட்ட பின்னர் - அவற்றை மீளப் பெற்று, மீள உருவாக்கம் (Recycling) செய்யும் பொறுப்பு அந்த இலத்திரனியல் நிறுவனத்தின் பொறுப்பாகும் என்ற புதிய சட்டம் ஒன்றை - ஒகஸ்ட் மாதத்தில் கொண்டுவருவதைத் பிரிட்டன் தற்போதைக்கு சிறிது காலம் பிற்போட்டுள்ளது. இந்த முறையை நடைமுறைப்படுத்த சிறிது காலம் தேவை என்பதை இப்போதாவது அரசு உணர்ந்தது என மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.



இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்கள் - இதேபோன்று ஜேர்மனியும் இத்தகைய கூட்டத்தை அமுல் செய்வதை சிறிது காலம் பிற்போட்டுள்ளது. எனினும் சுவீடனில் இந்தத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்துவது குறிப்பிடத்தக்கது

# பாரிய உயிரினப் படிமப்பாறை சீனாவில் மீட்பு



பல்லாண்டு காலத்துக்கு முன் அநேக உயிரினங்கள் ஒன்றாக இறந்த கற்படிமங்கள் தென் சீனாவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.


எனினும் இந்த உயிரினங்கள் ஒரேயடியாக இறந்தவை அல்ல. காலத்துக்குக் காலம் இந்தப் பகுதியில் இறந்த உயிரினங்களின் படிவுகளே என சீன அகழ்வாய்வாளர்கள் நம்புகின்றனர்.

250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இது படிப்படியாக நடந்த படிமங்களே எனக் கூறப்படுகிறது.

பேர்மியன் ட்ரையாசிக் யுகத்தில் ஏற்பட்ட சூழல் மாற்றங்கள் இந்தப் படிமங்களை பெரிய பாதைகளாக மாற்றியுள்ளன. காலநிலை மாற்றம் உலகில் காணப்பட்ட உயிரினப் பல்வகைமையைப் பெரிதாக மாற்றியுள்ளதை இந்தக் கற்பாறைப் படிமங்கள் காட்டுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# வயகரா உபயோகம் கண்ணைப் பறிக்கும்

பாலுணர்வு ஊக்கி வயகரா குளிகைகள் - கண் பார்வையைப் பாதிக்கக் கூடிய ஆபத்து உள்ளதாக, அமெரிக்க மினசோட்டா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.



இந்தப் பல்கலைக்கழக மருந்துவர்கள் இத்தகைய ஆபத்தை எதிர் நோக்கியுள்ள ஏழு பேரைத் தற்போது அடையாளம் கண்டுள்ளனர். இது தற்போது 14 பேராக அதிகரித்துள்ளதாம்.

50 வயதுக்கும் 69 வயதுக்கிடைப்பட்ட இவர்கள் வயகரா பாவித்த பின்னர் தமது கட்புலம் குறைவடைவதாக முறையிட்டுள்ளனர். இவர்களது பார்வை நரம்புகளில் கோளாறுகள் உள்ளதாக ஆய்வு செய்த மருத்துவர்கள் கூறுகின்றனர்.

எனினும் இவர்களில் ஒருவரே தமது கண்களினதும் பார்வை குறைந்துள்ளதாகக் கூறியுள்ளார். சிலர் தமக்கு நீலம், பச்சை நிறங்களாக மட்டுமே காட்சிகள் தெரிவதாகக் கூறுகின்றனர். இதற்கு கண்ணுடன் தொடர்புபட்ட நயோன் Nonarteritic Anterior is Chemic Optic Neuropathy என்ற நோயே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

# சமாதான நடவடிக்கைகளை அரசு துரிதப்படுத்த வேண்டும்!

## வவுனியா வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் மகஜர்

(வவுனியா)

சமாதான முன்னெடுப்பை அரசாங்கம் துரிதப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, வவுனியா மாவட்டத்தில் நேற்று மாபெரும் கண்ட னப் பேரணி இடம்பெற்றது.

இந்தப் பேரணியில் கையளிக்கப் பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது -

இலங்கையில் நீண்ட காலமாக புரையோடியிருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழ் அரசியல் தலைவர்களுக்கும், தென்னிலங்கை அரசியல் தலைவர்களுக்கும் இடையே பல்லாண்டு காலமாக பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதும், தமிழ் மக்களுக்கு எவ்வித விமோசனமும் கிடைக்கப் பெறாத இறுதி நிலையில், தமிழ் மக்கள் இன ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட்ட போது போரியல் நிலை ஏற்பட்டது.

இதன்போது உலக நாடுகளின் கவனம் இலங்கையையும் ஈர்க்கத் தொடங்கியது. இது தமிழீழ விடுதலைப் புலிகளின் உயிர்த் தியாகத்தாலும், பல போர்முனை வெற்றிகளின் பயனாலும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப்பெற்ற உறுதிநிலையாகும். தமிழீழ விடுதலைப் புலிகளை போரினால் எதுவும் செய்ய முடியாது என்ற நிலையை இலங்கை அரசு ஏற்றுக்கொண்ட வேளை - தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தைச் செய்தனர்.

இந்த ஆரம்ப நடவடிக்கை காரணமாக அன்றைய அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

சர்வதேச நாடுகளின் மேற்பார்வை மத்தியஸ்தம் நெறிப்படுத்தல் வழிகாட்டலின் கீழ் - அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றது. இந்தவேளை தன்னம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக வடக்கு - கிழக்கை அலகாகக் கொண்ட சிரான் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் அதன் செயற்பாடு ஆரம்பிக்கப்பட முன்னரே அந்த அமைப்பு செயலிழந்தது. அடிப்படைக் கட்டமைப்புத் தேவைகள் வடக்கு - கிழக்கு அமைந்த ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு அது தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப் படைக்கப்பட வேண்டும் என்ற காலத்தின் தேவைக் கோரிக்கை பரிசீலிக்கப்படாமலேயே அரசினால் நிராகரிக்கப்பட்டது.

அத்தோடு பல தடைகளுக்கு மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருந்த பேச்சுவார்த்தை சில அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றாமை - அரசின் அழுத்தங்கள் காரணமாக முறிவடைந்தது.

அண்மையில் சுனாமி அனர்த்தம் காரணமாக அழிவுற்ற பிரதேசங்களை வெளிநாட்டு நிதியுதவியுடன் புனரமைப்பதற்கான பொதுக் கட்டமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே உள்ளது. பொது மக்கள் உட்பட நிராயுத பாணிகளாக அரசியல் கடமைகளில் ஈடுபட்டு வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் படையினரால் படுகொலை செய்யப்படுகிறார்கள்.

பொதுமக்கள் பலர் இராணுவ வாகனங்களினால் மோதப்பட்டு பரிதாபமாக இறக்கின்றனர். இராணுவத்தினரால் பெண்கள், சிறுவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் படுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் போர் நிறுத்தக் காலப் பகுதியிலேயே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடைபெற்றுள்ளன.

இராணுவ காவலரணுக்கு அருகில் தமிழீழ விடுதலைப்புலிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவற்றுக்குப் பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப் பட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படாமையால், இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்றவண்ணம் உள்ளன.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் பெருந்தொகை நிதி பாதுகாப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வெளிநாட்டிலிருந்து ஆயுத தளபாடங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அது மட்டுமல்லாது, புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்படுவதுடன் பழையவை புதுப்பிக்கப்பட்டு பதுங்கு குழிகளும், காவலரண்களும் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுவருவதுடன், ஆயுதப்படைக்கு புதிய ஆளணியினர் சேர்க்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள், அரசு மீண்டும் யுத்தத்திற்கு தயாராகின்றது என்பதையே உணர்த்துகின்றது.

வன்செயல் காரணமாக புலம் பெயர்ந்தோர் தொடர்ந்தும் அகதி முகாம்களில் (வெளிநாட்டிலும், உள்நாட்டிலும்) எதுவித அடிப்படை வசதிகளும் இன்றித் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் இவர்களது பாரம்பரியகுடி நிலங்கள், பயிர் செய்யும் வயல் நிலங்கள், பொதுக் கட்டடங்கள், பாடசாலைகள், பொதுப் போக்குவரத்துப் பாதைகள் என்பன தொடர்ந்தும் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு அவர்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

இவற்றினால் மக்கள் விரக்தியின் விளிம்பில் இருப்பதுடன், பாடசாலை மாணவர்கள், மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்துகின்றனர். மீள்குடியேற்றம் மந்த வேகத்திலேயே நடைபெறுகின்றது. வெளிநாட்டு நிதியுதவிகள் அவர்களைச் சென்றடையாது வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டும், துஷ்பிரயோகம் செய்யப்பட்டும் வருகின்றது.

சுனாமி அனர்த்தத்திற்கு உதவிக் கரங்களை நீட்டியவாறு இலங்கைக்கு விஜயம் செய்த கொபி அனான் உட்பட உலகத் தலைவர்கள் வடக்கு - கிழக்கை பார்வையிடுவதது திட்டமிட்டு இடைநிறுத்தப்பட்டது. வெளிநாட்டிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதியுதவி விநியோகத்திலும் எமது பிரதேசம் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் எமது பாதிப்புற்ற பிரதேசங்களை உலக நாடுகளுக்கு விளம்பரப்படுத்தியே தாங்கள் அதிக நிதியுத வியை பெற்றிருந்தீர்கள் என்பதை யும் இவ்வாறான அரசின் பல செயல் களையும் நாங்கள் தங்களுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டுள்ளோம் என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## தமிழீழ விளையாட்டுத் துறையினர் நடாத்தும் பூப்பந்தாட்டப் போட்டி

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் ஆதரவில் தமிழீழ விளையாட்டுத்துறை நடாத்தும் பூப்பந்தாட்டப் போட்டி நாளையும், நாளைமறு தினமும் கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஒற்றையர், இரட்டையர் போட்டிகளாக நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் இளையோர் செயற்பாட்டு நிறுவனம் அல்லது தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று நாளை காலை 10 மணிக்கு முதல் பதிவை மேற்கொள்ளலாம்.

மின் ஒளியில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் வெற்றிபெறும் வீரர்களுக்கு பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என, தமிழீழ விளையாட்டுத்துறையினர் அறிவித்துள்ளனர்.



கிளிநொச்சி - கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்றுமாடி வகுப்பறைக் கட்டடத்தொகுதியை படத்தில் காணலாம்

## தொற்றுநோய் ஏற்படும் அபாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மல்லாவி நகர்ப் பகுதியில் நகரக் கழிவுகள் உரிய காலத்தில் அகற்றப்படுவதில்லை. இதனால் அந்தப் பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச சபையின் கீழுள்ள மல்லாவி நகர்ப் பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும், மல்லாவி பொதுச்சந்தைப் பகுதியிலும் நாளாந்தம் சேரும் கழிவுப் பொருட்கள் உரிய காலத்தில் அகற்றப்படுவதில்லை. இதனால் அந்தப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதுடன், தொற்று நோய்கள் பரவும் அபாய நிலையும் காணப்படுகிறது.

## கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் தொழிற்சங்க இணையத்தின் கலந்துரையாடல் நேற்று முன்தினம் மன்னார் சமாதான செயலகத்தில் இடம்பெற்றது.

தொழிற்சங்க இணையச் செயலாளர் எஸ்.இரட்ணசிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தொழிற் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டன.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஏப்ரல் - 12

1606 :இங்கிலாந்தின் தேசியக் கொடியாக யூனியன்ஜாக் கொடி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1633 :சூரியனைச் சுற்றியே எல்லாக் கோள்களும் வலம் வருவதாகக் கூறும் கொப்பர் நிக்கசஸ்ஸின் சூரிய மையக் கொள்கையை உறுதிப்படுத்தியதற்காக சமய நீதிமன்றம் கலிலியோவை விசாரணை செய்தது. இக்கூற்றை உறுதி செய்வதாகத் தெரிவிக்கும் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக் கொண்டு விடுதலை செய்தது.

1856 :லண்டன் சென் ஜோர்ஜ் மருத்துவமனையில் செயற்கைச் சுவாச முதலுதவி முறைபற்றி டொக்டர் மார்ஷல் ஹோல் விவரித்துக் கூறினார்.

1907 : சுவிட்சர்லாந்தில் ஆண்கள் அனைவருக்கும் இராணுவப் பயிற்சி அளிக்க வகை செய்யும் இராணுவச் சட்டம் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.

1911 : லண்டனில் இருந்து பரிஸுக்கு எங்கும் நிற்காமல் பியாரி பிரையர் என்பவர் நான்குமணி நேரத்தில் விமானத்தை ஓட்டிச் சென்றார்.

1918 : பிளாண்டர்ஸ் போர்க்களத்தில் மேர்வில்லியை 13 மணி நேரம் இடைவிடாமல் 170 ஜேர்மனிய விமானங்கள் தாக்கியழித்தன.

1942 :இந்தியாவை பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை செய்கின்றோம் என்ற ஜப்பானிய அறிவிப்புக்கு நேரு எதிர்ப்புத் தெரிவித்தார்.

1943 : 1939 ஆம் ஆண்டு ரஷ்யப்படையால் கொலை செய்யப்பட்ட 4100 போலந்து அதிகாரிகளின் உடல்களை ரஷ்யாவிலுள்ள காட்யின்காட்டில் கண்டுபிடித்ததாக ஜேர்மனி அறிவித்தது. ரஷ்யா இதனை மறுத்தது.

1945: ஜோர்ஜியாவில் வார்ம்ஸ்பிரிங் என்ற இடத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மூளை உதிரப் போக்கு காரணமாக திடீரென்று காலமானார்.

1961 : ரஷ்யா வோஸ்டாக் - 1 என்ற விண்கலம் மூலம் யூரி ககாரின் என்பவரை முதன் முதலாக விண்வெளிக்கு அனுப்பியது. முதன்முதல் விண்வெளிக்குச் சென்ற வீரர் என்ற பெயர் இவருக்குக் கிடைக்க காரணமாக இருந்த பயணம் இதுவாகும். இந்த நாளே விண்வெளி வீரர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

1981 : கொலம்பியா-1 என்ற விண்வெளி ஓடம் அமெரிக்காவால் ஜான்யங், பாப்கிரிப்பன் என்ற இரு விண்வெளி வீரர்களுடன் விண்ணில் செலுத்தப்பட்டது.

1982: அமெரிக்காவின் சிக்காகோ நகர மேயர் தேர்தலில் முதன் முதலாக ஹெரால்ட் வோசிங்டன் என்ற கறுப்பு இனத்தைச் சேர்ந் தவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1983 : கம்போடியாவை இருவாரப் போருக்குப்பின் கைப்பற்றிக் கொண்டதாக வியட்னாம் அறிவித்தது.

1984 : சலெஞ்சர் விண்வெளி ஓடத்தில் சென்ற விண்வெளி வீரர்கள் சுற்றுவட்டப் பாதையில் சுற்றிக் கொண்டிருந்த சோலர் மாக்ஸ் என்ற செயற்கைக்கோளை மீட்டு பழுது பார்த்துவிட்டு, மீண்டும் சுற்றுவட்டப் பாதையில் இயங்க விட்டனர்.

1985 : அமெரிக்காவினால் டிஸ்கவரி -51-டி என்ற விண்வெளி ஓடம் ஏழு விண்வெளி வீரர்களுடன் செலுத்தப்பட்டது. இதில் அமெரிக்க செனட்டர் ஒருவரும் பார்வையாளராகச் சென்றிருந்தார். இது 168 மணி நேரத்தில் 112 முறை பூமியை வலம் வந்து, கென்னடி விண்வெளி மையத்தில் தரை இறங்கியது.

1992 : மகளிர் காவல்நிலையம் தமிழ்நாட்டில் முதன் முதலாக திறந்து வைக்கப்பட்டது.

தொகுப்பு - சந்துரு



அடிப்படை வசதியற்ற நிலையில் காணப்படும் செல்வபுரம் கலைமகள் முன்பள்ளியை படத்தில் காணலாம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாம் கிழமை தரும்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## புலிகளின் விமானங்களும் நீர்மூழ்கிக் கப்பலும்; அரசினது புதிய பிரசார யுத்த நடவடிக்கையும்!

கடந்த மாத ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளின் விமானபபடையணி குறித்தும், அவர்களிடமுள்ளதாக அரசதரப்பு கூறிய இரண்டே இரண்டு இலகுரக விமானங்கள் குறித்தும், அவற்றிற்கான ஒடுபாதைகள் குறித்து இலங்கை இராணுவத்தரப்பினர் திடீரென பரபரப்பூட்டும் வகையில் வெளியிட்ட அரசியல் உள்நோக்கங்களுடன் கூடிய பிரசார அடிப்படையிலான செய்திகள், தென்பகுதி செய்தி ஊடகங்களில் முக்கிய இடத்தை அடைத்துக் கொண்டதுடன், விடுதலைப் புலிகளை மீண்டும் ஒரு யுத்தத்திற்கு பாரிய அளவிலான தயாரிப்புக்களை மேற்கொண்டு வருகிறார்கள் என்ற கருத்தை தென்னிலங்கை மக்கள் மத்தியிலும், சமாதானத்தை வலியுறுத்தி நிற்கும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் தவறான முறையில் பரப்ப முயன்றது நினைவிருக்கலாம்.

இதனை ஒரு போர் நிறுத்த மீறலாக விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் குற்றம் சுமத்தும் வகையில் அரசு ஒரு பிரசார நாடகத்தைப் பாரியளவில் அரங்கேற்ற முயன்று அதில் தோல்வி கண்ட விடயம் மிகவும் வேடிக்கையான ஒன்றேயாகும்.

போர்நிறுத்த உடன்பாட்டைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, புலிகள் வான் படையணி ஒன்றை உருவாக்கியுள்ளதுடன் இரு இலகுரக விமானங்களைக் கொள்வனவு செய்து கடத்திவந்துள்ளார்கள் என்றும் அதற்கான ஓடுபாதையொன்றையும் அமைத்துள்ளார்கள் என்றும் பரபரப்பாக செய்தியொன்றை வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க பி.பி.ஸிக்கு அளித்த செவ்வி ஒன்றில் இதனை ஒரு யுத்த நிறுத்த மீறல் என்று வர்ணித்தார்.

அதனைத் தொடர்ந்து இவ்விடயத்தை சர்ச்சைக்குரியதும், கண்டனத்திற்குரியதுமான ஒன்றாக்க முயன்ற அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் - அரசின் பொய் முகத்தை இனங்காட்டுவதிலும், அதன் மீதான சமாதான நகர்வுகள் தொடர்பான நம்பகத்தன்மையை சந்தேகிப்பதிலுமே போய்முடிந்தது எனலாம்.

இந்த, புலிகளின் விமானங்கள் தொடர்பான செய்தியுடன் இந்தியா சென்ற கதிர்காமர், இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என இந்திய அரசுக்கு உபதேசிப்பதன்மூலம் அவர்களின் புலிகள் மீதான சினத்தை அதிகப்படுத்தமுயன்றார்.

இதனைத் தொடர்ந்து செக் குடியரசு நாட்டுத்தயாரிப்பான இலகுரக விமானங்களே விடுதலைப்புலிகள் வசம் இருப்பதாக அமெரிக்கா இலங்கையரசுக்கு உறுதி செய்துள்ளதாக செய்திகள் வெளியாகின.

இந்த விமானங்களின் நடமாட்டத்தை இனம்கண்டு அழிக்க சக்திவாய்ந்த ராடர் கருவிகளை இலங்கைக்கு வழங்க பாகிஸ்தான் முன்வந்துள்ளதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன.

இந்தியாவின் தோழர்களாகத் தற்போது தம்மை இனங்காட்ட பெரிதும் முயலும் ஜே.வி.பியினர், புலிகளின் விமானப் படையால் இந்தியாவுக்கே அச்சுறுத்தல் அதிகம் என எச்சரித்து அதற்கு 'தூபம்' போடமுயன்றனர்.

இந்த விமானங்களைத் தாக்கியழிக்க செக்குடியரசே ஏவுகணைகளை வழங்கத் தயாராக உள்ளதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளதாகவும் தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து புலிகளின் விமானங்களை ராடர் மூலம் கண்காணிக்க முடியாது என குண்டைத் தூக்கி அரசின் தலையில் போட்டது 'ஜேன்ஸ் டிபென்ஸ் வீக்லி' என்ற சர்வதேச புகழ் பெற்ற சஞ்சிகை. எல்லாவற்றிற்கும் மேலாக இந்த இரு விமானங்களைக் கொண்டு கொழும்பின் அரைவாசியைப் புலிகளால் அழித்து விட முடியுமென்று கிலியேற்ற முயன்றார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

கடைசியில் அனைத்தும் 'சண்டியனாய் எழுந்து நொண்டியாய் விழுந்த' கதையாகிப் போய்விட்டது.

விடுதலைப்புலிகளிடம் வான்படையணியும், வான்கலங்களும் இருப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. அது மிகப்பழைய, போர்நிறுத்த உடன்பாட்டிற்கு முந்திய காலக் கதையே என்பது ஆதாரபூர்வமாக தெரியவர எல்லாருமே வாயை மூடிக்கொள்ள, அனைத்து பிரசார வெடிகளும் புஸ்வாணமாகிப் போயின.

அது முடிந்து சில நாட்கள் கழியவில்லை -


இலங்கை அரசின் அரசியல் இராணுவ 'கோயபல்ஸ்'கள் புதிய பொய்யொன்றைக் கற்பனை பண்ணி அதனைப் பூதாகரமாகக் காட்டி பிரசாரம் பண்ணத் தொடங்கிவிட்டார்கள்.

அதாவது, கிழக்கு கடற்பகுதியில் விடுதலைப்புலிகளின் நீர்மூழ்கிக்கப்பல் ஒன்றின் நடமாட்டம் இருக்கலாம் எனக் கடற்படைத் தலைமையகம் சந்தேகம் கொண்டுள்ளதுடன் அப்படி நீருக்கடியில் நடமாடும் கலங்களைத் தாக்கியழிக்கும்படி உத்தரவும் இட்டுள்ளதாம். இது போதும்!

அடுத்த சில வாரங்களுக்கு தென்பகுதி மக்களுக்கு கிலியேற்படுத்தவும், இந்தியா உட்பட ஏனைய சர்வதேச நாடுகளுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தவும், அரசுக்கு 'ஒரு நீர்மூழ்கிக்கப்பல்' சமாச்சாரம் கிடைத்துவிட்டது.

இத்தகைய பிரசார ரீதியிலான நடவடிக்கைகளும் ஒரு வகையில் யுத்தநிறுத்த மீறலேயாகும். ஆனாலும், இம்மாதிரியான பிரசார யுத்தத்தில் (PropagandaWar) இலங்கையரசு கடந்த இரு தசாப்தங்களாக அடைந்துள்ள தோல்விகளிலிருந்து இன்னமும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# விடுதலைப் புலிகளுக்கு விமானப் படையுடன் நீர்மூழ்கியுமா?

விடுதலைப்புலிகளிடம் போர் விமானங்கள் இரண்டு இருக்கின்றன. கிளிநொச்சியில் இரணைமடுப்பகுதியில் விமான ஓடுபாதையும் இருக்கிறது. விமானங்கள் வருவதைக் கண்டறியும் ராடர் சாதனங்களும் இங்கு பொருத்தப்பட்டிருக்கின்றன. இப்பொழுது கடற்புலிகளிடம் நீழ்மூழ்கிக் கப்பல்களும் இருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டிருக்கின்றன. என்று நண்பர் பரமசிவம் சொல்லிக் கொண்டு போனார்.

தென்னிலங்கை - அதுவும் கொழும்பு ஊடகங்கள் இப்படி விடுதலைப்புலிகளிடம் விமானப்படை கடற்படை என எல்லாப் படைகளுமே வலுவான நிலையில் தாக்குதலுக்கு ஆயத்தமாக இருப்பதாக இந்த ஊடகங்கள் படம் காட்டுகின்றன என்று சொல்லவருகிறீர் அப்படித்தானே என்றேன்.

அதுவேதான். காங்கேசன் துறைக்கு அப்பால் கடற்படையின் டோராப் படகொன்று வழமைபோல் மார்ச் 28 ஆம் திகதியும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது படகிலிருந்த மாலுமிகள் ஆழ்கடலில் ஒரு வஸ்து ஆழ்ந்து மிதந்து மீண்டும் மூழ்கி சென்றதைப் பார்த்தனராம். விடுதலைப்புலிகள் நீர்மூழ்கிக் கப்பல் பெற்றிருக்கிறார்களோ வேறொரு நாட்டின் நீழ்மூழ்கிக் கப்பலாக இருக்குமோ என்று டோராப் படகிலிருந்த மாலுமிகளுக்குச் சந்தேகம் வந்ததாம். கடற்படையின் வடபகுதித் தலைமைப் பீடத்துக்குத் தகவல் கொடுத்தார்கள். வடபகுதித் தலைமைப் பீடம் கடற்படைத் தலைமைக்கு அறிவித்தது. உடனே எதுவாக இருந்தாலும் அதைக் கண்டவுடன் சுடும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாம். இப்பொழுதும் இது நடைமுறையிலிருக்கிறது. நீர்மூழ்கிக் கப்பலை இலங்கைக் கடற்படையினர் இதுவரை கண்டதில்லையோ என்றார் பரமசிவம்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வாரப்பத்திரிகையில் இராணுவ ஆய்வாளரின் தகவல்களிலிருந்து பரமசிவம் இந்தச் செய்தியைத் தெரிவித்தார். இதிலிருந்து நீர் என்ன நினைக்கிறீர் என்று பரமசிவத்தைக் கேட்டேன்.

பிரேமதாசாவுக்குப் பிறகு எதிர்பாராத விதமாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக டி.பி.விஜயதுங்க பதவிக்கு வந்தார். நாட்டின் நிலைமையைச் சமாளிப்பதற்கு அவர் ஒரு யுக்தியைக் கையாண்டார். பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றிய பேச்சுக்களை ஒதுக்கிவைத்துவிட்டு நாட்டில் இனப்பிரச்சினையென்று எதுவுமில்லை இருப்பதெல்லாம் பயங்கரவாதப் பிரச்சினைதான் என்றார். சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகள் இது தான் சரியான வழி என்று பயங்கரவாதம் என்று கூக்குரலிடத் தொடங்கினர். இதன்பின் கதிர்காமர் ஐயாவுக்கு இது கிடைத்தது. விட்டேனா பார் என்று உலக நாடுகளிலெல்லாம் பயங்கரவாதப் பீதியைக் கொண்டு சென்றார். அமெரிக்காவின் பயங்கரவாத ஒழிப்புடன் சேர்த்து அதையே இங்கு கொண்டு வரவும் இன்னமும் முயற்சிசெய்கிறார் இப்போது இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கும் பெரும்பாடுபடுகிறார். இது இன்னமும் கைகூடவில்லை.

திருகோணமலைத் துறைமுகத்துக்கும், திருகோணமலைக்குமே ஆபத்து, இதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கே ஆபத்து என்று கூச்சல் போட்டார், இந்தியாவுக்குப்போய் விடுதலைப் புலிகளால் ஆபத்துவந்து கொண்டிருக்கிறதென்றார். உலகின் நான்காவது பெரிய கடற்படை விடுதலைப் புலிகளிடம் இருக்கிறதென்றும் கதிர்காமர் சொல்லிப் பார்த்தார். சுப்பிரமணியம் சுவாமியையும் அவரைப்போன்றவர்களையும் கதிர்காமர் தூண்டிவிட்டுப் பார்த்தார். இந்தியா யோசனையிலாழ்ந்தது. அம்மையாரும் இந்தியாவுக்குப் போய்ப் பேசினார். இந்தியப் பிரதமர் இங்கே வருவாரென்று கதிர்காமர் சொன்னார். அவரை வரவேற்க அம்மையாரும் கொழும்பில் காத்திருந்தார். அவர் வரவில்லை. இதற்கிடையில் தமிழ் நாட்டில் ஜெயலலிதாவின் குரல் ஒலி குறைந்திருக்கிறது. தமிழகத்திலிருந்து வேறு சிலர் பிரதமருடன் பேசி வருகின்றனர். நிலைமை எதிர்த்திசையில் காற்றைத் திருப்பிவிடும் போலிருக்கிறது. இந்த நிலையில் இப்போது விடுதலைப்புலிகளிடம் நீர்மூழ்கிக் கப்பலும் இருக்கிறது, விமானப்படை விமானங்களும் இருக்கின்றன என்றால் இந்தியா கொஞ்சம் யோசிக்கமாட்டாதா? என்று விளக்கம் சொன்னார் பரமசிவம்.

ஓகோ கதை அப்படிப் போகிறதா? இவர்களுடைய இந்தப் பிரசாரங்களையும், நடவடிக்கைகளையும் பார்த்தால் விடுதலைப் புலிகள் முற்காலத்தில் போல நாடு நாடாகப் பிடித்துத் தமது புலிக்கொடிகளை ஏற்றித் தமது சாம்ராஜ்யத்தைப் பெருப்பித்து நிலைநாட்டுவதற்குப் புறப்பட்டிருப்பதாகவல்லவா தோன்றும். கதிர்காமர் இப்படித்தான் சொல்லித் திரிகிறாரோ? ஆனந்தசங்கரி அஸ்கிரிய பீடாதிபதியிடம் போய்த் தமிழ் மக்கள் ஆயுத பலத்துடன் ஆளப்படுகிறார்கள். அவர்களுக்குச் சுதந்திரம் இல்லை என்று சொல்லுகிறாரென்றால் கதிர்காமர் டெல்கிக்கு போய் என்னதான் சொல்லமுடியாது? என்றேன்.

தமிழர் தாயகத்தில் ஆயுதங்களுடன் 'பாதுகாப்புக் கடமைகளில்' ஈடுபட்டு இப்போது ஆயுதபலத்துடன் ஆண்டுகொண்டிருப்பவர்கள் யார் என்பதைக்கூட சங்கரியால் அறிந்துகொள்ள முடியவில்லை. புலிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டுமென்று அஸ்கிரிய பீடாதிபதி, சங்கூதியாரிடம் சொல்லியிருக்கிறார். இவர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதைச் சங்கூதியார் சொல்லமாட்டார். எந்த ஒரு விடுதலைப் போராட்டத்துக்கும் உலகில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டிருக்கும் சோதனைகள்போல் ஏற்பட்டிருக்காது. எந்த இனத்துக்காக, எவருடைய விடுதலைக்காகத் தங்கள் உயிரை அர்ப்பணித்துப் போராடி ஓரளவு நிலத்தையும், மக்களையும் மீட்டுள்ளபோதும்கூட அதே இனத்தைச் சேர்ந்த புல்லுருவிகள் விடுதலையை முழுமையடையவிடாமல் தடையாக நிற்கிறார்கள். மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் செயல்களில் ஈடுபடுகிறார்கள். எந்த ஆட்சியாளரினால் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டுச் சிறையில் இளைஞர்களை அடைத்துச் சித்திரவதை செய்து, கொலை செய்து, தமிழ்ப் பெண்களை மானபங்கம் செய்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முனைந்தார்களோ அவர்களுக்கு இவர்கள் இன்று சாமரம் வீசுவதுதான் வேதனை! இவர்கள் பதவியிலிருக்க வேண்டும் இல்லையேல் காட்டிக்கொடுக்கவேண்டும் என்பது இவர்கள் செயல். மற்றுமொரு சாரார் தாங்கள் எதையும் சாதிக்கமுடியாமல் போய்விட்டதால் மற்றவரும் எதையும் சாதிக்கக்கூடாது என்பது இவர்கள் போக்கு! இன்று விடுதலைப் புலிகளுக்கெதிராகச் செயற்படும் தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டுள்ளவர்கள் அடுத்துத் தாங்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்று சொல்லட்டுமே! தமிழ் மக்களுக்குப் புலிகளிடம் சுதந்திரமில்லை என்று கூறும் சங்கரியார் தமிழ் மக்களுக்கு எப்படிச் சுதந்திரம் கொண்டுவரப் போகிறார்? பழையபடி சந்திரிகா ஆட்சியில் இராணுவத்தின் பாதுகாப்புடன் மீண்டும் சுதந்திரம் கொண்டு வருவதா சங்கரியாரின் நோக்கம்? என்று கேட்டபடியே எழுந்தார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு...

### இவர்களுக்கு ஆசிரிய நியமனம் எப்போது?

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு கூடுதலான புள்ளிகள் பெற்றவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது.

இந்த நேர்முகத் தேர்வுக்குப் பலர் சமுகமளிக்கவில்லை. (பட்டதாரிகள் நியமனத்திற்குப் பலர் சென்றதால்). இதனால் இரண்டாவது தடவையும் நேர்முகத் தேர்வு நடத்தி அதன்பின்பே ஆசிரிய நியமனம் வழங்கவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.தியாகலிங்கம் தெரிவித்ததாக பத்திரிகை மூலம் அறிந்து கொண்டோம். இதன்படி இரண்டாவது முறையாக நேர்முகத் தேர்வுக்கு அழைத்திருந்தார்கள்.

ஆனால் கடந்த 1.03.2005 இல் முதற் தடவையில் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு இன்றுவரை நியமனம் வழங்கப்படவில்லை. ஒரேநாளில் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தும் ஏன் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. மனவிரக்தியுற்றிருக்கும் என் போன்றவர்களுக்கு உடனடியாகத் தீர்வு தருமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

இது மாகாணக் கல்விச் செயலாளருக்குச் சமர்ப்பணம்.

*வடமராட்சி*

*பாதிக்கப்பட்டவர்கள் சார்பில்*
*மாறன்*

அரசியற்கட்டுரை

கே.ரீ.கணேசலிங்கம்

# அரசியல் அமைப்பை அவமானப்படுத்தும் சிங்கள அரசியல் தலைமைகள்!





இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்புப் பற்றி முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும், சிறையிலிருக்கும் அரசியல் வாதியுமான எஸ்.பி திஸநாயக்க திடுக்கிடும் தகவல் ஒன்றை வெளியிட்டார். அதன்படி ஜனாதிபதி மீண்டும் ஆட்சிக்கு வரலாம் என்றும், அவ்வாறு ஆட்சிக்கு வருவதை எந்த அரசியல் சரத்தும் தடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அரசியல் யாப்பிலேயே ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக ஆட்சிக்கு வர முடியாது என்ற நிபந்தனை தெளிவாக எழுதப்பட்டுள்ளது என்பதையும், மீண்டும் ஒரு தடவை நினைவுபடுத்திக் கொண்டு எஸ்.பி இன் அரசியல் ஓட்டைக்கான அரசியல் கலாசாரத்தை நோக்குவோம்.

அரசியல் அமைப்பு என்பது ஒரு நாட்டினது அல்லது அந்த மக்கள் கூட்டத்தினது உயர்ந்த அரசியல் கலாசாரத்தின் பாங்கை நிர்ணயிப்பதில் சக்திபடைத்த ஓரம்சமாகும். அரசியல் கலாசாரம் என்பது - மக்களையும், பிரஜைகளையும் அரசியல் அமைப்புக்கூடாக நல்வழிப்படுத்துகின்றதாக அமைதல் வேண்டும். அதாவது - ஒரு மக்கள் கூட்டம் தமது நாட்டின் அரசியலமைப்பின் வலுவையும், தரத்தையும் அதனால் தமது வாழ்வுக்கும், அபிவிருத்திக்கும் சுபீட்சத்துக்கும் எத்தகைய பலம் கிடைக்கிறது என்பதை அளவீடு செய்யக்கூடியவர்களாக இருப்பதைக் குறிப்பதாகும்.

ஒரு வகையில் அரசியலமைப்பு - பிரஜைகளைப் பற்றிய உள்ளடக்கத்தையும், பிரஜைகள் அரசியல் யாப்பைப் பற்றிய உள்ளடக்கத்தையும் கொண்டவைகளாக காணப்படவேண்டும். இரண்டும், ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்றதைக் குறிப்பதாகும்.

சட்டத்துக்கு ஏன் மனிதன் கட்டுப்படுகிறான் என்ற கேள்விக்கு பாடநூல் பதில்கள் என்னவோ கூறினாலும் பிரஜைகளது நலனிலும், நாட்டு மக்களது நலனிலும் இறுதியாக முழு நாட்டினது நலனிலும் அந்தச் சட்டம் சிரத்தையும் ,கவனமும் கொள்கின்றதென்ற நம்பிக்கை மனிதனிடம் ஏற்படும் போது சட்டத்துக்கு கட்டுப்படுகிறான். சட்டத்தை காவல்காக்கும் பொலிஸ் படையோ நீதிமன்றமோ தான் பிறப்பிக்கும் அதிகாரக் கட்டளையால் சட்டம் பாதுகாக்கப் படுகிறது எனக்கருதினாலோ அல்லது அப்படியான சூழல் ஏற்பட்டாலோ அது உணர்வு பூர்வமாக கட்டுப்படுகின்றதாக அமையாது. அதை எப்போதாவது அந்த மனிதர் கூட்டம் மீறிவரும். சாதாரணமாக இலங்கை தமிழர்களைப் பார்க்கலாம் -

எப்போதும் தமிழ் மக்களுக்கு எதிராகவும், நீதியற்ற நீதிமன்றங்களாகவும் இலங்கையின் சட்டங்களும், நீதிமன்றங்களும் தொழிற்பட ஆரம்பித்தனவோ, அப்போதே இலங்கை சட்டங்களை தமிழ் மக்கள் நிராகரிக்க ஆரம்பித்து விட்டார்கள். இது சிறப்பான அரசியல் கலாசாரத்தைக் கொண்ட அரசியல் அமைப்பாகாது. அவ்வாறு கருதுவதுமில்லை.

உலகில் சட்டத்தை அதிகம் மதிக்கும் நாடுகளாக ஸ்கன்டிநேவிய நாடுகள் காணப்படுகின்றன. காரணம் - அந்த மக்களையும், நாட்டையும் அந்த அரசியல் வரைபுகள் பாதுகாத்து வருகின்றன. சட்டம் பிரஜைக்கு மதிப்பளிக்கும் போது, பிரஜை சட்டத்துக்கு மதிப்பளிக்கும் நிலை வளர்ச்சியடையும். இதனையே ஓர் அரசியல் யாப்பு ஏற்படுத்த வேண்டும்.

ஓர் அரசியல் திட்டம் பிரஜைகளைப் பாதுகாக்க வேண்டும். நல்வழிப்படுத்த வேண்டும். அபிவிருத்தி நோக்கி நாட்டையும், மக்களையும் கொண்டு செல்லவேண்டும். அப்போது சிறப்பான அரசியல் கலாசாரம் வளரும். அதற்கேற்ப சுதேசமான, மக்களுக்குரித்தானதாக மக்கள் சார்பு நிலையிலிருந்து எழுவதாக அரசியல் அமைப்புக்கள் அமைய வேண்டும். பிற நாடுகளிலும், தேசங்களிலும் காணப்படுபவற்றின் தொகுப்பை - இலங்கை மக்களதோ இலங்கை அரசினது அரசியலமைப்பு என்றோ கூறி விடமுடியாது.

தற்போது இலங்கையில் அமுலில் இருக்கும் அரசியல் திட்டம் முழுக்க முழுக்க முதலாளித்துவ நாடுகளின் சாயல்களையும், அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவுமே உருவாக்கப்பட்டது. அவற்றால் இலங்கை மக்களுக்கோ, இலங்கைக்கோ எந்தப் பயனும் இல்லை. வேண்டுமாயின் ஆட்சி யில் இருக்கும் அதிகார வர்க்கத்துக்கு அதனால் பாதுகாப்பும், வாய்ப்புகளும் கிடைத்திருக்கலாம். அது அத்தகைய உயர் வர்க்கத்தின் நலனுக்காக தயார் செய்யப்பட்ட யாப்பாகவே உள்ளது. இந்த யாப்பு ஏற்படுத்திவரும் அரசியல் கலாசாரம் இரண்டு வகை சார்ந்தது.

ஒன்று - மேற்கு நாடுகளின் அல்லது உலகமயப்படுத்தல் சக்திகளின் அரசியல் கலாசாரத்தை இலங்கை முழுவதும் பரப்புவது. இது கணிசமான வெற்றிகளை அடைந்ததுடன், சில நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றது.

இரண்டாவது - உயர் வர்க்கம் மற்றும் ஆட்சியாளனின் நலன்களைப் பாதுகாக்கும் அரசியல் கலாசாரத்தை ஆற்றிவருகின்றது. இதில் முழுமையான வெற்றியையே இந்த யாப்பு ஏற்படுத்தி வருகிறது. ஆட்சியாளரின் நலன் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதில் கணிசமான வெற்றியை அடைந்திருக்கிறது.

இதனால் இலங்கைக்கோ, இலங்கையின் பிரஜைகளுக்கோ எந்தப் பயனும் எட்டவில்லை. மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்ற, அடக்குமுறைக்குள்ளாக்கப்படுகின்ற தன்மையும் சுதேச பொருளாதாரத்துக்கோ, உற்பத்திக்கோ எந்த விதமான பங்கும் அளிக்கப்படாது வெளிநாட்டுப் பொருளாதாரத்துக்கும், அதன் சந்தைக்காகவும் உழைக்கும் அரசியல் யாப்பாகக் காணப்படுகிறது.

எனவே எஸ்.பி .கூறுவது போல சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஆட்சிக்கு வர அரசியல் யாப்பில் ஓட்டை இருக்கிறது என்ற செய்தி எவ்வளவு மோசமான அரசியல் கலாசாரத்தைக் காட்டுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இதைவிட இன்னும் பல ஓட்டைகள் அரசியல் யாப்பில் இருக்கலாம். ஆனால் அவற்றை எல்லாம் பயன்படுத்தி ஆட்சியில் அமர்வதற்காக வல்லஅவை. நாட்டுக்கு ஒரு நெருக்கடி உண்மையாகவே ஏற்படும் போது அப்போது அதனைப் பயன்படுத்துவதாகும்.

அவ்வாறு பயன்படுத்துவதனால் ஒரு சிலர் பாதுகாக்கப்படுவதல்ல அதன் நோக்கம். முழு நாடுமே பாதுகாக்கப்படுகிறது என்றால், அதுவே சிறப்பான அரசியல் கலாசாரமாகும். திஸநாயக்க விளம்புவது போல, சந்திரிகா ஜனாதிபதி ஆவதற்கு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பை சிறந்த அரசியல் கலாசாரத்துக்கானது எனக் கூறுவதில்லை.

அமெரிக்க அரசியல் அமைப்பிலும் இத்தகைய நடைமுறை உண்டு. எந்த ஜனாதிபதியும் உப ஜனாதிபதியாவதில்லை. உப ஜனாதிபதி - ஜனாதிபதியாக விரும்புவதும், போட்டியிடுவதும் இயல்பான அம்சமாகும். சந்திரிகா குமாரதுங்க இரண்டு தடவை ஜனாதிபதியாக இருந்தவர் என்றால், இரண்டு தடவை முதல் பெண்மணியாக விளங்கியவர் அவர். இரண்டாவது பெண்மணியாக விரும்புகிறார் என்பது இலங்கையின் அரசியல் கலாசாரத்தின் பலவீனத்தைக் காட்டுகிறது. அசிங்கமான அவமானமான அரசியல் கலாசாரத்தை போதிப்பவர்களாக தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் காணப்படுகின்றனர். தற்போதைய காலத்திலும் சரி, சுதந்திர காலத்திலும் சரி சிங்கள தலைவர்களும், தமிழ் மிதவாதத் தலைவர்களும் ஆட்சியைப் பிடிப்பதற்கும், அதிகாரத்தை அனுபவதிப்பதற்குமாகவே அரசியல் பதவிகளைப் பயன்படுத்தியவர்களாக உள்ளனர். எந்த அரசியல் தலைவரும் பதவியைத் துறந்து நாட்டின் நலனையோ, மக்களின் நலனையோ பாதுகாத்ததென்று கூறமுடியாது.

டட்லிசேனநாயக்க மட்டும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் பதவியைத் துறந்த தலைவராகக் காணப்பட்டவர். அதுவும் நெருக்கடிமிக்க காலமென்றதை மறக்க முடியாது. அதைத்தவிர யாருமே பதவிக் காலத்தை மேலும் அனுவிக்க ஆசைப்பட்டவராக இருந்தார்களே அன்றி, கௌரவமாக, நேர்மையாக நடந்தவர்களாகக் கருத முடியாது. இதில் பண்டர நாயக்க குடும்பம் மிகக் கவனமாகவும், ஆட்சிக்காலத்தை சாக்குப் போக்கு சொல்லி அனுபவிப்பதிலும் கவனமாக இருந்தத்தை மறக்கமுடியாது.

தனிச் சிங்களம், பௌத்தம் என்ற சுலோகத்தை பண்டாரநாயக்க ஆட்சிக்காகவே பயன்படுத்தியவர். 1975 ஆம் ஆண்டுடன் ஆட்சிக் காலம் முடிந்த போதும், அரசியலமைப்பைச் சாட்டாகக் கொண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க 1977 வரை ஆட்சியை நீடித்தவர். அப்படிப்பட்ட குடும்பத்தின் வாரிசு சந்திரிகா குமாரதுங்க எப்படி நடந்து கொள்வார் என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

ஆனால் இவை எதுவும் இலங்கையின் அரசியல் கலாசாரத்தை வளர்த்தவை என்று கருதவோ, எண்ணவோ முடியாது. இதனை முன்மாதிரியாகவோ, உதாரணமாகவோ கொள்வது அவமானமானது. உண்மையில் அரசியல் தலைமையும் அரசியல் நிறுவனங்களும் பேண வேண்டிய, பின்பற்றவேண்டிய பிரதான அம்சம் அரசியலமைப்பும், அதனால் எழும் அரசியல் கலாசாரமுமாகும். செங்கோலை அரசியலமைப்பின் நாடாளுமன்றத்தின் உயர்வான பொக்கிசம் என்று கருதினால், அதனைத் திருடுவதும், மறைத்து வைப்பதும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இன்னோர் நாடாளுமன்ற உறுப்பினர் மீது தாக்குவதும் தான் தென்னிலங்கை அரசியல் வாதிகளது அரசியல் கலாசாரமாக உள்ளது.

இது காட்டுமிராண்டித் தனமான அரசியலுக்கு ஒப்பானது. நாடாளுமன்ற நடைமுறையையும், அரசியலமைப்பு நடைமுறையையும் பேணத் தெரியாதவர்கள் அரசியலமைப்பு ரீதியில் பயங்கரவாதிகளே. ஜனநாயக அரசியல் கலாசாரத்தை மீறும் ஜனநாயக விரோதிகளே. காட்டில் மட்டுமல்ல, நாட்டில் மட்டுமல்ல, நாடாளுமன்றத்திலும் வன்முறையைப் பிரயோகிக்கும் வன்முறைவாதிகளாகவே உள்ளனர். எனவே இலங்கையின் அரசியலமைப்புக்கும், ஆட்சியாளரின் நடத்தைக்கும் இடையில் எந்த விதமான இணைவும் கிடையாது. மேற்குலகத்தின் அரசியலமைப்புக்களை சட்டவரைபுகளில் பதிவு செய்துவிட்டு, உலகத்துக்கும், இலங்கை மக்களுக்கும் ஜனநாயகம் என்று கூறிக் கொண்டு, காட்டுமிராண்டித்தனமான அரசியலையும், கடமையையும், அரசியல் சட்டங்களையும் மீறுகின்ற அரசியல் கலாசாரத்தைப் பின்பற்றிக் கொண்டு, தமது நலன்களுக்காக அரசியலமைப்பை பிரயோகிப்பதே தென்னிலங்கை அரசியல் வாதிகளின் அரசியலாகும். இவை எந்த அரசியல் விதிமுறைக்கும், அகராதிக்கும் உட்பட்ட விடயமாகவோ, பின்பற்றப்பட வேண்டிய விடயமாகவோ கொள்ள முடியாது.

எஸ்.பி கூறியது போன்று சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஜனாதிபதியாகலாம். அல்லது எஸ்.பி சந்திரிகா கூட்டும் மீண்டும் சாத்தியப்படலாம். இவை எதுவும் நியாயமான, தர்மமான பண்பாட்டைப பேணுகின்ற அரசியல் கலாசாரங்கள் அல்ல. சிங்கள உயர்வர்க்கம் ஏற்படுத்தியிருக்கும் அரசியல் கலாசாரம் அவமானத்தையும், அசௌகரியத்தையுமே இலங்கை அரசியல் வரலாற்றில் ஏற்படுத்தியிருக்கிறது. இவர்களின் நடத்தையால் அரசியலும், அரசியலமைப்பும் அவமதிக்கப்பட்டுள்ளது.

---

பகுதி - 80

சங்கர்



# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

திருமலையில் கூடுதலாகப் பாதிக்கப்பட்டது முஸ்லிம்களே. ஆனாலும் ஜயந்த விஜயசேகராவின் கருத்தை மறுத்து தனது இனத்துக்காக வாதிட நஜீப் A மஜீத் துணியவில்லை. இந்த நிலையில் தமது மக்களுக்காக - அவர்களின் நலன்களுக்காகவே சொந்தக் கட்சிகளைப் பிளந்து அரசியலில் இணைந்து கொண்டோம் என இவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியுமா? நஜீப் A மஜீத் பிரதிஅமைச்சர். ஆனால், ஜயந்த விஜயசேகராவோ சாதாரண எம்.பி. இங்கு தீர்மானிக்கும் சக்தி பதவிகளுக்கில்லை. இனங்களுக்குத் தான் என்பது வெள்ளிடைமலை.

இதேவேளை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்பாக சில விடயங்கள் குறிப்பிட்டுத் தான் ஆக வேண்டும்.

1978 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சூறாவளி அடித்த போது, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உதவிப் பொருட்களுடன் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர். அதே போல 2000 ஆம் ஆண்டு ஆனையிறவுப் போர் நடந்த சமயத்தில் கிளாலி - பளைப் பகுதிகளில் மக்களை மனிதக் கேடயங்களாக படையினர் தடுத்து வைத்திருந்த போது, உயிராபத்தைப் பொருட்படுத்தாது அங்கு சென்று வாதாடி - போராடி தமது மக்களை மீட்டவர்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள். யாழ்.மக்களை இராணுவம் இரும்புக்கரம் கொண்டு அடக்கிய போது, போராடும் ஆற்றலை மக்களுக்கு ஊட்ட - பொங்கு தமிழை நடத்திக் காட்டியவர்களும் அவர்களே. இந்த நடவடிக்கைகள் பெருமளவில் பயனும் அளித்தது.

ஏன் தற்போது சுனாமி அனர்த்தத்தின்போது அம்பாறை- மட்டக்களப்பு பகுதிகளில் மருத்துவப் பணிகளை முன்னெடுத்தவர்கள் அவர்களே. யாழ். முல்லை மாவட்டங்களில் முழுமையாகப் பயன்படுத்தி நிவாரணப் பணிகளை முன்னெடுத்தவர்கள் இவர்களே. இதேபோல கிழக்குப் பல்கலைக்கழகமும், கல்லடிப் பாலத்துக்கு அண்மையில் பணிமனை ஒன்றைத் திறந்து, ஏதோ தம்மாலான பணிகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சுனாமியின் போது எதைச் சாதித்தது என்ற கேள்வி எழுகின்றது. தமது சமூகம் சார்ந்த அல்லது மனித நேயப் பணிகளில் ஈடுபட இவர்களுக்கு யார் தடை விதித்தது? யாழ்.பல்கலைக்கழகம் பொங்கு தமிழ் பிரகடனத்தை முன் வைத்தது போலவே, தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் சில அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனால் சுனாமியின் போது அது செயலற்றதாகியிருந்தது. எனவே சில அரசியல் கட்சிகளின் போக்குக்கு தென்கிழக்கு பல்கலைக் கழகம் இழுபட்டுவிட்டது.

அநீதிகளுக்கும், அதர்மத்துக்கும் எதிராகப் போரிடவும், மற்றையவர்களின் துன்பங்களைக் கண்டு துடிக்கவும் வேண்டிய இளமைப் பருவ செயற்பாடுகள் எங்கே மறைந்தன. தென் கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் சுயாதீனமாகச் செயற்பட்டிருந்தால், இந்த அவல நிலை ஏற்பட்டிருக்காது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

மேலும் முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்தவரை துண்டு துண்டுகளாக உடைந்து அரசியல் பலம் இல்லாத நிலையில் உள்ளன. அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.க வேட்பாளர் பட்டியலில் எந்த முஸ்லிமின் பெயரும் இடம் பெறக் கூடாது என, அரசியல் பேரத்தில் உச்சநிலையில் இருந்தது முஸ்லிம் காங்கிரஸ் கட்சி. ஆனால் இன்று அது குறிப்பிட்ட அரசியல் தீர்மானங்களை தான் எடுத்திருந்தாலும், அதற்கு மாறாக ஐ.தே.க தீர்மானம் எடுத்தால் அதனுடைய தீர்மானத்துக்கே பணிந்து போகும் கையாலாகாத்தனத்தில் உள்ளது. வெறுமனே தமிழர் தரப்பின் மீது குற்றஞ்சாட்டுவதால் மட்டும் முஸ்லிம்களின் இரட்சகராக தம்மைக் காட்டிக் கொள்ளும் அரசியல் நீண்ட காலத்துக்கு எடுபடாது.

இந்த நிலையில் கிண்ணியா உலமாசபைத் தலைவர் கே.உத்மான் லெப்பை சமாதான முயற்சிகள் பொதுக்கட்டமைப்பு பற்றி விடுத்துள்ள அறிக்கையின் சில பகுதிகளை நாம் நோக்குவோம் -

முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றுவதனால் தற்போதைய நிலையில் முஸ்லிம்களின் உரிமைகள் பற்றிப் பேசுவதற்கும், குரல் கொடுப்பதற்கும் எந்தவொரு பலம் பொருந்திய முஸ்லிம் கட்சியும் இல்லை.

பொதுக் கட்டமைப்புக் குழுவில் வட- கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் தலைவர்களே இடம் பெற வேண்டும். ஏனெனில் அவர்களே வட - கிழக்கில் யுத்தத்தாலும், இயற்கை அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பொதுப் பிரச்சினைகளை நன்கறிவர்.

எனவே வட- கிழக்கைப் பிரதி நிதித்துவப்படுத்தும் முஸ்லிம் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் தத்தமது சுய மற்றும் கட்சி பேதங்களை மறந்து தமக்கிடையே ஒரு கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். இந்த முஸ்லிம் கட்டமைப்பு வட -கிழக்கில் பலம் பொருந்திய கட்சியான இரா.சம்பந்தன் எம்.பி தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோடும், ஏனைய தமிழ்த் தலைவர்களோடும் பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு கூட்டு முடிவுக்கு வர வேண்டும்.

அதன்பின்னர் இந்த ஒன்றிணைந்த தமிழ் - முஸ்லிம் கட்டமைப்புத் தான் வட -கிழக்கு அளித்த கூட்டமைப்புப் பற்றி இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்.

காலத்தின் தேவையறிந்த பொன்னான வரிகள் இவை.

# 9 மாடிக்கட்டடம் இடிந்து வீழ்ந்து பங்களாதேஷில் 12 பேர் உயிரிழப்பு!



பங்களாதேஷில் ஒன்பது மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 12 பேர் உயிரிழந்ததுடன், 80 பேர் காயத்துடன் மீட்கப்பட்டனர்.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிலிருந்து 40 கி.மீற்றர் தூரத்தில் சாவர் நகருள்ளது. இங்கு ஒன்பது மாடிக்கட்டடத்தில் ஆடைத் தொழிற்சாலை உள்ளது. இங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வேலைக்கென வழக்கத்தைவிட குறைவாக 500 பேரே சென்றனர். இதன்போது திடீரென அந்தத் தொழிற்சாலை முழுவதும் இடிந்து வீழ்ந்தது.

இந்தக் கட்ட இடிபாடுகளில் சிக்கி அங்கு பணியாற்றியவர்களில் 12 பேர் உயிரிழந்ததுடன், 80 பேர் காயத்துடன் மீட்கப்பட்டனர். மிகுதியானவர்கள் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர்.

இவர்களை மீட்கும் பணியில் தீயணைப்புப் படையினர், ராணுவம் மற்றும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். மீட்புப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் – கட்டட இடிபாடுகளில் சிக்கியவர்களின் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.

# பாப்பரசர் 2 ஆம் ஜோன் போலுக்கு புனிதர் பட்டம் வழங்க கோரிக்கை!

(வத்திக்கான்)

மறைந்த பாப்பரசர் இரண்டாம் ஜோன்போலின் இறுதிச்சடங்கு கடந்த 8 ஆம்திகதி நடந்தது. அப்போது அவருக்குப் புனிதர் பட்டம் வழங்கவேண்டும் என்று போலந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் குரல் கொடுத்தனர்.

வழக்கமாக 3 அதிசயங்களைச் செய்தவர்களுக்குத்தான் புனிதர் பட்டம் வழங்கப்படும். இந்த நிலையில் பாப்பரசர் மூளை நோயாளியைக் குணப்படுத்தி அதிசயம் செய்திருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பாப்பரசரின் தனிச்செயலாளராக இருந்தவர் பேராயர் ஸ்டெனிஸ்லா திசிவிஸ். கடந்த 40 ஆண்டுகளாக இவர் பாப்பரசருடன் நெருக்கமாக இருந்துவந்தார். இவர் தான் பாப்பரசர் அதிசயம் செய்ததாக கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது –

கடந்த 1998 ஆம் ஆண்டு பேராயர் ஸ்டெனிஸ்லாவுக்கு அறிமுகமான ஒருவர் என்னிடம் பேசினார். அப்போது அவரது அமெரிக்க நண்பர் ஒருவர் மூளைக்கட்டி நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கும் தறுவாயில் இருப்பதாகத் தெரிவித்தார்.

அவர் உயிரிழக்கும் முன் பாப்பரசரைச் சந்திக்கவேண்டும், இயேசு கிறிஸ்து பிறந்த ஜெருசலேம் நகருக்குச் செல்லவேண்டும், பின்னர் அமெரிக்கா திரும்பிச்சென்று சாக வேண்டும் என்று 3 ஆசைகளை வைத்திருந்தார்.

அதற்குப் பாப்பரசரைச் சந்திக்க ஏற்பாடு செய்துதரும்படி என்னிடம் கேட்டார். உடனே நான் அந்த நோயாளி நபரை சந்தித்தேன். அவரது முகமே அவர் நோயாளி என்பதைக் காட்டியது. அவர து தலையில் ஒரு முடிஇல்லை. அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை பலன் இல்லாமல் இருப்பது தெளிவாகத் தெரிந்தது.

அப்போது பாப்பரசர் ரோம் நகருக்கு வெளியே இருந்தார். அவரை நான் தொடர்பு கொண்டு பேசினேன். இதையடுத்து கத்தோலிக்க மத வழக்கப்படி சாகும் தறுவாயில் இருக்கும் அந்த நோயாளிக்காக ப் பாப்பரசர் சிறப்புத் திருப்பலி ஒன்றை நடத்தினார். சில மணி நேரம் கழித்து எனக்கு அறிமுகமானவர் தொலை பேசியில் என்னைத் தொடர்பு கொண்டார்.

அமெரிக்க நோயாளி நண்பரின் மூளைக்கட்டி நோய் சிலமணி நேரத்துக்கு முன்பு காணாமல்போய் விட்டதாகவும், தற்போது அவர் முழுநலனுடன் இருப்பதாகவும் தெரிவித்தார். இதை நான் கடவுளின் செயல் என்று அப்போது நினைத்தேன். ஆனால் 3 ஆண்டுகளுக்கு முன்பு பாப்பரசரால் இந்த அதிசயம் நிகழ்த்தப்பட்டது என்பதை உணர்ந்து வெளிப்படுத்தினேன் எனத் தெரிவித்தார்.



இதனால் பாப்பரசருக்குப் புனிதர் பட்டம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருக்கிறது. இதற்கு 3 வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகிறது. முதலில் – ஒருவரை புனிதராக அறிவிக்க அவர் பிறருக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டவேண்டும்.

இரண்டாவது – அவர் அதிசயம் செய்திருக்கவேண்டும். அப்போது அவர் புனிதப்படுத்தல் நிலையை அடைவார். மூன்றாவது – மேலும் ஒரு அதிசயம் செய்தால், அவர் புனிதர் என்று அறிவிக்கப்படுவார். இது தொடர்பாக வத்திக்கான் செய்தித் தொடர்பாளர் கூறும்போது, புதிதாகத் தேர்வு செய்யப்படும் பாப்பரசர் இது குறித்து முடிவு செய்வார் என்று தெரிவித்தார்.

இதற்கிடையே மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தன்னைப் பாப்பரசர் குணப்படுத்தி இருப்பதாகக் கூறியுள்ளார். தனக்கு 15 வயதாக இருக்கும்போது லீயுகிமியா நோயால் பாதிக்கப்பட்டு இருந்ததாகவும், அது பாப்பரசரால் குணப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இன்னொருவர் கொலம்பியாவை சேர்ந்த கன்னியாஸ்திரி ஆவார். இவர் தெரிவிக்கும் போது – தனது நிலை தடுமாற்ற நோயைப் பாப்பரசர் குணப்படுத்தினார் என்று தெரிவித்துள்ளார்.

# வருடாந்த மஹோற்சவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறுகின்றது.

நாளை புதன்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும், நாளை மறுதினம் வியாழக்கிழமை புதுவருடத் தினத்தன்று காலை 10 மணிக்கு இரதோற்சவமும், மாலை 5 மணிக்கு தீர்த்தோற்சவமும், அதனைத் தொடர்ந்து கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளதுடன், மறுநாள் வெள்ளிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

இரவு உற்சவம் 12 மணியுடன் நிறைவடையவுள்ளதால், ஆலய வளாகத்தில் விடியோ திரைப்படம் காண்பிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# கேள்வி அறிவித்தல்

## பிரதேச செயலகம் – தென்மராட்சி

1. பிரதேச செயலர், தென்மராட்சி அவர்களினால் கலாச்சார மண்டபப் புனரமைப்பு வேலைக்குரிய கேள்வி (Stage 1) 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் பிரதேச செயலகத்தில் அன்றையதினம் (29.04.2005) பி.ப.2 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

2. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலையின் பொருட்டு நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டிடம் நிர்மாணிப்பதற்கு தரம் (M 8) இலும் அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர் மாத்திரமே கேள்விப்பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவர்.

3. கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினை பிரதேச செயலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர்.

4. கேள்வி வைப்புப் பணத்தை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப்பெற்று 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணி வரை கேள்விப் பத்திரங்களைப் பிரதேச செயலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

5. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'கலாச்சார மண்டபத்துக்கான கேள்வி விண்ணப்பம்' எனக் குறிப்பிட்டு கேள்விகள் யாவும் பிரதேச செயலர் பிரதேச செயலகம் தென்மராட்சி என்ற முகவரிக்கு 29.04.2005 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|
| கலாச்சார மண்டபம் புனரமைப்பு - தென்மராட்சி | 65,000.00 | 500.00 |

இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதேச செயலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

செ.ஸ்ரீநிவாசன்.
(கேள்விச் சபைத் தலைவர்)
பிரதேச செயலர்,
தென்மராட்சி,

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
11.04.2005.

(சி-4045)

# சேவைநலன் பாராட்டு விழா

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அதிபராக இருந்து ஓய்வு பெறும் திருமதி ரதிதேவி சோதிலிங்கத்தின் சேவைநலன் பாராட்டு விழா வித்தியாலய அரங்கில் நாளை நடைபெறவுள்ளது.

நாளை காலை 8.30 மணிக்கு வித்தியாலய உப அதிபர் செல்வி.சி. சிவமலர் தலைமையில் நடைபெறும் இந்த சேவை நலன் பாராட்டு விழாவில் – வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் உட்பட வித்தியாலய சமூகம் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர்.

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் சட்டவிரோத மண், கல் அகழ்வு

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் சட்டவிரோதமான முறையில் செம்மண், கல் போன்றவற்றை அகழ்ந்து செல்வதாக அந்தப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

செம்மண், கல் போன்றவற்றை அகழ்வதால் காணியில் இருக்கின்ற பாரிய மரங்கள் யாவும் வேருடன் சாய்ந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் – காணிக்குள் பாரிய குழிகளும் ஏற்படுகின்றன.

இந்தக் காணியில் அகழப்படுகின்ற கல், செம்மண் போன்றன யாழ்ப்பாணம், நெல்லியடி போன்ற இடங்களில் கொண்டுசென்று விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் அயற் காணிகளிலும் இடம்பெற வாய்ப்புக்களுள்ளதால், சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# கண்ணீர் பூக்கள்



## அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா அவர்கள்

கைதடி ஊரில் பிறந்திட்ட எங்கள் ராசா –
உங்களை;
கண்டவரைக் கேட்டால், காணாதவரும்
அறிவர்.
பஞ்சமென்று யாரிருந்தார்
உம்மைக் காண்போர்.
தங்கத் தலைமகனாய் பிறந்திட்ட நீங்கள்,
எங்கள்பலருக்கு ஏணியாய் இருந்தீர்கள்.
ஏன் இந்தப் பயணம்? – இன்று?
இடைவழியில் எம்மைவிட்டு பிரிய? !!!
உயர்ந்த பண்பும், நடையும், சாந்த
மான முகமும்,
உம்மைப்போல் இவ் அகிலத்தில் யாரிடம் உண்டு?
கைதடி ஊரே கலங்கி நிற்கின்றது.
எழுந்து வாரும், ஏங்கிய எம்மைக் காண!!!

உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, தங்களைப் பிரிந்து வாழும் குடும்பத்தினரின் துயரையும் நாம் பகிர்ந்துகொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நன்றி.

சுவிஸ், லண்டன் வாழ்
கைதடி மக்கள்.

(சி-4046)






நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பேச்சுக்களை ஆரம்பிக்கக்கோரி வவுனியாவில் நேற்று பேரணி!

(வவுனியா)

நிரந்தர சமாதானத்துக்கு தடையாக உள்ள முட்டுக்கட்டைகளை நீக்கி விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று வவுனியாவில் மாபெரும் கண்டனப் பேரணி இடம்பெற்றது.

வவுனியா வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இந்தப் பேரணியில் பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியற் கட்சிப் பிரமுகர்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் வவுனியா தமிழ் மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பித்த கண்டனப் பேரணி- ஏ9 வீதி வழியாக நகரசபை மைதானத்தைச் சென்றடைந்தது.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதில் ஜனாதிபதி சந்திரிகா காலம் கடத்தி வருகின்றனமை, சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கு மக்களுக்கு அரசு நிவாரணங்களை வழங்குவதில் புறக்கணித்து வருவதைக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குமாறு கோரியும் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பேரணி நகரசபை மைதானத்தைச் சென்றடைந்ததும் அங்கு அரசுக்கு எதிரான கண்டனப் பேரணி இடம்பெற்றது.

இந்தப் பேரணியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இதன்பின்னர் ஜனாதிபதிக்கான மகஜரை வவுனியா அரச அதிபர் சண்முகத்திடமும், கண்காணிப்புக்



குழுவின் தலைவருக்கான மகஜரினை வவுனியா மாவட்ட கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதியிடமும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ச.குலதேவராஜா கையளித்தார். (3)

## பெறுபேறுகள் மீளாய்வுக்கு விண்ணப்பம் செய்யலாம்!

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை பாடசாலை அதிபரினூடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை நேரடியாகவும் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடங்களுக்கும் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புவதோடு, இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பேரில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியே பெறப்பட்ட 100 ரூபாவுக்கான காசுக்கட்டளைகளையும் இணைத்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## இடைநிறுத்தப்பட்ட...

தப்பட்ட ஆனந்தா கல்லூரியின் அதிபர் பி.ஏ.அபேரத்ன - கண்டி கிரிபத்கும்புரவில் இரண்டு மாடி வீடொன்றை நிர்மாணித்து வருவதும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வீட்டுக்கு இவர் இதுவரையில் 7.5 மில்லியன் ரூபாவைச் செலவு செய்துள்ளமையும், இந்த வீட்டைக் கட்டுவதற்கான பேர்ச் ஒன்று 80 ஆயிரம் ரூபா செலவில் 15 பேர்ச் காணியைக் கொள்வனவு செய்துள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதுதவிர, எட்மன்ட் வீதியிலுள்ள அரசாங்க மாடிவீட்டில் வீடொன்றையும் இந்த அதிபர் பெற்றுள்ளார். இந்த வீட்டுக்காக 5 லட்சம் ரூபாவை ஆரம்பக் கட்டணமாகச் செலுத்தியுள்ளார் அபேரத்ன. 1987 வரையில் சப் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய இவர், அந்தப் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு, தரம் 1 அதிபராக கல்வித் திணைக்களத்தில் இணைந்தார். அதேநேரம், 2001 ஜனவரியில் இவர் ஆனந்தா கல்லூரியின் அதிபராகக் கடமைப் பொறுப்பேற்றார்.

கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள மலியதேவா மகளிர் கல்லூரி அதிபர் கே.ஏ.வஜிர குமாரிஹாமியும் இதேபோன்று சொத்துக்களைச் சேர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலையின் அதிபராக 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதவியேற்ற பின்னர் - ஒரு பேர்ச் காணி ஒரு லட்சம் ரூபா வீதம் 30 பேர்ச் பரப்புக் கொண்ட காணியை இவர் குரு நாகலில் வாங்கியுள்ளார்.

இவரும் இரண்டு மாடிகளைக் கொண்ட வீடொன்றை நிர்மாணித்து வருவதுடன், இதுவரை இந்த வீட்டுக்கு 9 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

## பிரதமரின்...

இருந்து துப்பாக்கியொன்றும் நான்கு தோட்டாக்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

வாகனத்திலிருந்த இளைஞரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார். மகியங்கனை பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கடற்படை..

முகாமிலிருந்து பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

இவரின் மரணம் எவ்வாறு சம்பவித்தது என்பது குறித்த எதுவித தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை. இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சாள்ஸ்...

ஒருவரான உசாவும், சோதியா படையணியின் தாக்குதல் தளபதிகளில் ஒருவரான வரதாவும் சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்தனர்.

இதையடுத்து, போராளிகளின் விளையாட்டு அணிகளுக்கிடையிலான கபடிப்போட்டி நடைபெற்றது.

தொடர்ந்து போராளிகளின் கலைநிகழ்வுகள் நடைபெற்றன. இதில் கவிதா நிகழ்வு, மாவீரர் நடனம் மற்றும் போராளிகளின் இசை நிகழ்வுகள் எனப்பல நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கட்டளைத் தளபதிகள், தளபதிகள், போராளிகள் கலந்து கொண்டு சிறப்பித் தனர்.

D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி இந்து குருகுலம் முன்பாக)
A/L - 2007 பிரிவு 02
16 ஏப்ரல் 2005 - சனி காலை 7.00 மணி
D.C.M. இயக்குநர் S.வரதராஜன்

# எரிபொருள் விலைகள் விரைவில் உயரலாம்!

(கொழும்பு)

அடுத்த சில நாட்களில் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது. உலகசந்தையில் எரிபொருள் விலைகளில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் தலைவர்களின் தீர்மானத்துக்கமைய மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை 100 டொலர்களாக அதிகரிக்கும் என்றும் -

இதனால் உள்ளூரிலும் விரைவில் எரிபொருட்களின் விலை உயர்வடைய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - மின்சாரம் மற்றும் பெற்றோலியப் பொருட்களைச் சிக்கனமாக உபயோகிக்கும்படி அரசாங்கம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

உலகசந்தையில் விலை அதிகரித்து வருவதால் பெற்றோலியப் பொருட்களைச் சிக்கனமாக உபயோகிப்பது அவசியம் என்று அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த் கேட்டுள்ளார்.

எனினும் - பெற்றோல் மற்றும் மின்சாரத்தின் விலையை அதிகரிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை வரதராசா
(நகரசபை, சாவகச்சேரி)

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை வரதராசா 10.04.2005 (ஞாயிறு) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - சடப்பிள்ளை ஆகியோரின் மூத்தமகனும், காலஞ்சென்ற அம்பலவாணர் பறுவதம் தம்பதியினரின் அன்பு மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், விஜிதன் (கனடா), கஜிதன் (கனடா), கலைக்ஷனா (மாணவி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், இராஜேஸ்வரி, சண்முகராசா, காலஞ்சென்ற பாலசிங்கம், ஜேகேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்ற சத்தியேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), புஸ்பராசா (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், லாவண்யா, டிவர்ஷன், பாரிஷா, கபிஷன், பிரதீப், சரன்ஜா, பத்மயன் (லண்டன்), லக்ஷிகா (லண்டன்), ஜதுர்சன் (லண்டன்), யாழிசன் (லண்டன்), விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பெரியப்பாவும், சுயந்தன், சுகிர்தன் (லண்டன்), சுகன்யா (சுவிஸ்), சிந்துஜா (சுவிஸ்) ஆகியோரின் மாமாவும், காசிநாதர், சந்திரன் (சுவிஸ்), புவனேஸ்வரி, புஸ்பலீலாவதி, குகாந்தகி (லண்டன்), பேரின்பநாயகி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.04.2005) செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊத்தலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
தாய், சகோதரர்கள்
மைத்துனர்கள், மருமக்கள்.

கைதடி கிழக்கு,
கைதடி.
(1120)

வாணி விலாஸ்
வேலையாட்கள் தேவை
01. றொட்டி தயாரிப்பாளர்
02. சமையலாளர்
03. சமையல் உதவியாளர்
04. உணவு பரிமாறுபவர்
மேலும் பல வேலைவாய்ப்புக்கள்
தகுதியுடையவர்கள் 14.04.2005 இற்கு முன் நேரில் வரவும்.
சலுகைகள்: கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தங்குமிடவசதி, உணவு வசதி செய்துகொடுக்கப்படும்.
வாணி விலாஸ்
சுன்னாகம். (C/1119) உரிமையாளர்.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 99.14 | 100.04 |
| ஸ்ரேலிங் பவுண் | 186.35 | 188.96 |
| யூரோ | 127.70 | 129.85 |
| சுவிஸ் பிராங் | 82.21 | 84.13 |
| யென் | 0.9109 | 0.9280 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.